# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு2030 வைகாசி 20வியாழக்கிழமை (03-06-1999) UTHAYAN ALively NationalTamil Daily கதிர் 162


## சிவில் நிர்வாக சீர்குலைவு

### புலிகள் தம் அறிவுறுத்தலை தற்காலிகமாக நீக்கினர்!

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணக் குடாநாட்டில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அரச அலுவலகங்கள், திணைக்களப் பணிமனைகள் போன்றவற்றை இயங்காமல் தடைசெய்து சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைக்கும் வகையில் தாம் விடுத்த அறிவுறுத்தலைத் தற்காலிகமாக நீக்கியுள்ளதாக விடுதலைப் புலிகளின் தமிழீழ நிர்வாகச் சேவை யாழ். (10ஆம் பக்கம் பார்க்க)

### கடும் சட்ட நடவடிக்கை என்கிறார் படைத் தளபதி

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். அரச அலுவலகங்கள் மற்றும் திணைக்கள பணிமனைகளில் கடமையாற்றும் ஊழியர்கள் செவ்வாய், வெள்ளி ஆகிய நாள்களில் கடமைக்குச் செல்லாது விட்டால் அவர்களுக்கு எதிராக தற்போதுள்ள சட்டங்களின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று வட பகுதி இராணுவத் தளபதி (10 ஆம் பக்கம் பார்க்க)

# இ.தொ.கா.அலுவலகம் முன் நேற்று வீரவிதான இயக்கம் ஆர்ப்பாட்டம்!

## இ.தொ.கா.கொடிக்குதீவைப்பு சிங்கக் கொடியை ஏற்றினர்

கொழும்பு, ஜூன் 3

பயங்கரவாதத்துக்கு எதிரான அமைப்பு என்று சொல்லிக் கொள்ளும் வீரவிதான இயக்கம் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள இ. தொ. கா. அலுவலகம் முன் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

இ. தொ. கா. அலுவலகம் முன் பறந்து கொண்டிருந்த இ. தொ. கா. கொடியை இறக்கி அதற்குத் தீ வைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள், வீரவிதான இயக்கக் கொடியையும் சிங்கக் கொடியையும் கம்பத்தில் ஏற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான பிக்குமாரும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

வீரவிதான அமைப்பைச் சேர்ந்தவர்கள் நேற்றுப் பிற்பகல் 3மணியளவில் விகாரமாதேவி பூங்காவில் ஒன்று கூடி அங்கிருந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை ஆரம்பித்தனர்.

அலரிமாளிகை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பேரணி இடைவழியில் ஆனந்தகுமாரசுவாமி மாவத்தையில் உள்ள இ தொ. காவின் 'சௌமிய பவான்' தலைமையகம் முன்பாக நின்று கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அங்கிருந்து சென்ற பேரணி கொள்ளுப்பிட்டியில் உள்ள ஜனாதிபதியின் வாசஸ்தலமான அலரிமாளிகையை அடைந்தது

ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்றைக் கையளிக்க அவர்கள் முயன்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப வீரவிதான இயக்கத்தினரை வன்னிக்கு அனுப்பி வைக்கலாம் போல.........!

### லங்கா முடித்த வந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 3

திருகோணமலையில் இருந்து ஆயிரத்து 200பயணிகளுடன் 'லங்கா முடித்த' கப்பல் நேற்றுக் காலை காங் [10 ஆம் பக்கம் பார்க்க]

### நகரப்பகுதியில் புலிகளின் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டதாகத் தெரிவித்து சுவரொட்டிகள் நேற்று ஒட்டப் [10 ஆம் பக்கம் பார்க்க]

### குருநகரில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 3

குருநகர்ப் பகுதியில் நேற்று தந்தை மகன் உட்பட மூவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

மனித உரிமைகள் ஆணைக்குழு. யாழ். அலுவலகத்தில் அவர்களது உறவினர்களால் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குருநகர் ஐஸ் பிளாண்ட் (10 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் பதற்றம்

வீரவிதான அமைப்பினர் நேற்று மாலை 4.45 மணியளவில் இ. தொ. கா. அலுவலகம் முன் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் எதிரொலியாக கொழும்பு தமிழ் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

இ. தொ. கா. அலுவலகத்தில் இந்தியக் கொடி ஏற்றப்பட்டிருந்ததாகவும் —

அந்தக் கொடியையே தாம் இறக்கிவிட்டு தேசியக் கொடியை ஏற்றியதாகவும் — வீரவிதான அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று மாலை தகவல் வெளியிட்டதே பதற்றம் ஏற்படக் காரணம் எனக் கூறப்பட்டது.

அதேநேரம் — நகரின் பாதுகாப்பு நேற்று அதிகரிக்கப்பட்டிருந்தது. (இ-3)

### யாழ். நகரில் வர்த்தக நிலையம் தீப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையம் ஒன்று தீப்பிடித்து எரிந்து நாசமாகியது.

நேற்று முன்தினம் இரவு அந்த விற்பனை நிலையத்தைப் பூட்டிச் சென்ற உரிமையாளர் நேற்றுக் காலை 7 (10 ஆம் பக்கம் பார்க்க)

### பல பகுதிகளில் நேற்று படையினர் தேடுதல்!

யாழ்ப்பாணம், ஜூன் 3

குடாநாட்டில் பல பகுதிகளில் படையினர் நேற்றுத் தேடுதல்கள் நடத்தினர்.

யாழ். பஸ் நிலையப் பகுதி நண்பகல் 11-30 மணியளவில் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல்கள் இடம்பெற்றன.

திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோயிலடி மற்றும் சிவன் கோயிலடிப் பகுதிகள் நேற்றுக் காலை சுற்றிவளைக் [10 ஆம் பக்கம் பார்க்க]

### யாழ்ப்பாணத்தில் 'கார்ட்' ரெலிபோன்!

குடாநாட்டிலிருந்து உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு தொடர்பு கொள்ள வசதியான 'கார்ட்' மூலமான தொலைபேசிச் சேவை நேற்று அறிமுகம் செய்யப்பட்டது.

கொழும்பில் இயங்கும் 'ரைறெல்' ( TRITEL ) என்ற நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்தச் சேவையில், முதல் கட்டமாகப் பத்து நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

ஐந்நூறு ரூபா, இருநூறு ரூபா, நூறு ரூபா என்ற அடிப் (10 ஆம் பக்கம் பார்க்க)

### மாணவன் கைது

நெல்லியடி, ஜூன் 3

கரணவாய் பொன்னம்பலம் மகாவித்தியாலய பத்தாம் ஆண்டு மாணவனான கிருஷ்ணபிள்ளை மதிமோகன் (17 வயது) நேற்றுக்காலை படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அவரது உற (10 ஆம் பக்கம் பார்க்க)

### யுத்தத்தை நிறுத்தக் கோரி வவுனியாவில்நேற்று சமாதானப் பேரணி

#### ஈ.பி.ஆர்.எல்.எவ்.ஏற்பாட்டில்

வவுனியா, ஜூன் 3

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யவேண்டும் என்ற கோரிக்கை உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்றுச் சமாதானப்பேரணி ஒன்று இடம் [10 ஆம் பக்கம் பார்க்க]


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறீன் பீல்ட்

சனசமூக நிலையத்தினதும்
விளையாட்டுக் கழகத்தினதும்

# வாழ்த்துக்கள்

எமது கழகத்தின் மூத்த உறுப்பினர்
ஸ்வர ராக லயவினோத சுரபி
கலைச்செம்மல் - சங்கீதபூஷணம்

**திரு. எல். திலகநாயகம் போல்**
அவர்கள்
[உதவிக் கல்விப்பணிப்பாளர் (அழகியல்)]

கலாச்சார அமைச்சின்
**அதிஉயர் விருதான**
**"கலா பூஷணம்"**

விருதினைப் பெற்றமையையிட்டு மிக்க பெருமித மடைகின்றோம். அவர்களுக்கு எமது இதயபூர்வமான பாராட்டைத் தெரிவிப்பதுடன், அவர்கள் இசைத் துறையில் மேலும் பல சாதனைகள் புரிந்து ஒளி விளக்காய்த் திகழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.
[66299]

கிறீன் பீல்ட் சனசமூக நிலையமும்
விளையாட்டுக் கழகமும்

---

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க

## அறிவித்தல்

### அங்கத்தவர்களை உறுதிப்படுத்தல்

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தின் அங்கத்தவர்கள் தங்களின் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு 30-06-99 க்கு முன்னர் தமது கிளைகளில் தங்கள் பெயர் முகவரியினை உடனடியாக பதிவுசெய்து கொள்ளவும்.

அத்துடன் புதிதாக அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் ரூபா 100 பங்குப்பணம் செலுத்தி சேர்ந்து கொள்ளவும். இதுவரை ரூபா 100 பங்குப்பணம் செலுத்தி அங்கத்துவத்தைப் பூரணப் படுத்தாதோர் மிகுதிப் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தைப் பூரணப்படுத்தவும்.

செயலாளர்,
ஊ. ப. நோ. கூ. சங்கம்,
ஊர்காவற்றுறை. (சி/7760)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் தலைவர்
திரு. க. யோகராசா (யோகு)
அவர்களின் தந்தையார்

### சுப்பிரமணியம் கனகசபை
(கனகர்)

அவர்கள் 28—05—1999 அன்று சிவபதமடைந்தமையிட்டு அன்னாருக்கு எமது அஞ்சலியைச் செலுத்தி ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தினர்,
இணுவில் கிழக்கு.
[66305]

---

## கண்ணீர் அஞ்சலி

**சிவாஸ் ஸ்ருடியோ**
உரிமையாளர்
**திரு. இ. சிவபாலசுப்பிரமணியம்** (பாப்பா)
அவர்களின் அன்பு மனைவியார்

### திருமதி சி. ஜெயராணி

அவர்களின் திடீர் மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கும் ஏனைய உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

- ஊழியர்கள்
**சிவாஸ் ஸ்ருடியோ**, பண்டத்தரிப்பு.
**சிவாஸ் ஸ்ருடியோ**, சித்தன்கேணி.
**சிவாஸ் ஸ்ருடியோ**, வட்டுக்கோட்டை
(66289)

---

## விபத்தில் பெண் மரணம்

இராணுவ டிரக் மோதி மரணமானதாக தெரிவித்து நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் பெண் ஒருவரின் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த முருகன் சின்னம்மா என்பவரே உயிரிழந்தவராவார்.

கொடிகாமத்தில் இடம் பெற்ற விபத்தில் படுகாயமடைந்து, சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்படும்போதே இடைவழியில் இவர் மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.
(இ-15)

---

## விக்னா கல்வி நிறுவனம்

**A/L 2001**

தனி வியாபார
முடிவுக்கணக்கு
Sat. Sun. 12 — 1 p.m
ஆரம்பம்: 05-06-99
Sat 12 p m.
by:
Mr. BALAVASAN
[தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.]
(66284)

---

## செந்தூரன்

மினி சினிமா
பழைய பொலீஸ் நிலையம் முன்பாக.
சுன்னாகம்.
25 அடி அகல
வெண் திரையில்
10-30 மணிக்கு
கார்த்திக் - அஜித்
நடித்த
ஆனந்த பூங்காற்றே
2-30 மணிக்கு
எம் ஜி ஆர் - மஞ்சுளா
நடித்த
ரிக்‌ஷாக்காரன்
(66307)

---

## ராஜா

யாழ்ப்பாணம்
விஜய் - தேவயானி
ரம்பா - மணிவண்ணன்
செந்தில்
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன் வந்தாய்
10-30, 2-30
[சி/7740]

---

## நாகம்ஸ்

சுன்னாகம்
அர்ஜுன் - ரஞ்சிதா
கவுண்டமணி - செந்தில்
நடித்த
**ஜெய்ஹிந்த்**
காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)
(66252)

---

## லிபேட்டி

தியேட்டர்
அச்சுவேலி
சரண்ராஜ் - சுருதி
நடித்த
**அண்ணன் தங்கச்சி**
காட்சிகள்; 10 30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094-70-212223
(66140)

---

# மரண அறிவித்தல்கள்

அருட்செல்வி

## மே. வலேரியன் றெவ்வல்

வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்தவருமான அருட்செல்வி மே. வலேரியன் 01-06-99 அன்று காலை 9.00 மணியளவில் கொழும்பில் காலமானார்.

அவரது நல்லடக்கச்சடங்குகள் இன்று (03-06-99) வியாழக்கிழமை பி. ப. 3. 00 மணிக்கு சேமக்காலையில் நடைபெறும்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்கான இரங்கற் திருப் பலிப்பூசை சனிக்கிழமையன்று (05-06-99) பி ப. 5 00 மணிக்கு யாழ். தி. கு. கன்னியர் மடத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
சிஸ். மே. வீர்ஜினி
(மாகாண ஆலோசகர்)

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(66301)

---

## இராசையா தயாநிதி

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் பாரிஸை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா— தயாநிதி 1-6-99 இல் பாரிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா (மாஸ்ரர்) —தங்கரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்பு மகனும் திரு திருமதி இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும் ஹேமலதாவின் அன்புக் கணவரும் நிர்யானி, றஷ்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியசீலன், சரஸ்வதி, குணலக்ஷ்மி, கருணாநிதி, யதார்த்தநாதன் (அமெரிக்கா), அருளாளன் (கனடா), யோகலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஹேமராணி, ஹேமரஞ்சினி, ஹேமநளினி, ஹேமதயாளினி, ஹேமசுபோதினி, ஹேமதனுஷா, சந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. கருணாநிதி
(சகோதரன்)

46, பலாலி வீதி,
கந்தர்மடம்.
[66308]

---

## சுப்பிரமணியம் கனகசபை
(கனகர்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகசபை (கனகர்) அவர்கள் 28 - 5 - 99 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்மாவின் (வள்ளியம்மை) அன்புக் கணவரும் சந்திரலீலா (வேவி), ஸ்ரீகந்தராசா (குமார்-ஜேர்மனி), இந்திரலீலா (கனடா), தவராசா (ஜேர்மனி), குகராசா (ஜேர்மனி), யோகராசா (யோகு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கனகராசா (லண்டன்), நித்தியானந்தன் (செட்டி-கனடா), பிறேமாவதி (ஜேர்மனி), ஜெயமங்களா தேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியதா, நிரஞ்சன் மதூசன், மேனுசன் (ஜேர்மனி), காருணியா, லாவணியா, ஜீவாகரன் (கனடா), கவியரசன், தர்சிகா, கபிலன, கீர்த்திகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-6-99) வியாழக்கிழமை காலை 10. 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. குமார் [மகன்]
க. யோகு [மகன்]

சிவகாமி அம்மன் கோயிலடி,
புகையிரதப்பாதையருகில்,
இணுவில் கிழக்கு, இணுவில்.
[66304]

---

திருமதி

## சிவஞானம் அன்னம்மா

சரசாலை மந்தியைச் சேர்ந்ததிருமதி சிவஞானம் அன்னம்மா அவர்கள் 31 - 5 - 99 அன்று இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் அவர்களின் [உபஅதிபர், புத்தூர்ஸ்ரீசோமாஸ்கந்தகல்லூரி] அன்பு மனைவியும் திரு. அருணாசலம் [லண்டன்], மணிவாசன் [காஸ் கொம்பனி, கொழும்பு], செந்திவாசன் [கனடா], இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு. முருகையா, ஆனந்தி, கமலவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் கார்த்திகா, சுபேதா, ஸ்ரீராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திரு. அ. செல்லத்துரை [சிவதொண்டர் நிலையம், செங்கலடி], அ. சின்னப்பா ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற வீரகத்தி, பார்வதி, திருமதி சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [3 - 6 - 99] வியாழக்கிழமை நண்பகல் 12. 00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் குடும்ப மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. க. முருகையா
முகாமையாளர்
கிராமிய வங்கி,
நீர்வேலி.

சரசாலை மந்தி,
சரசாலை.
சி/7762

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஜி-8' நாடுகளின் சமாதானத்திட்டம்; யூகோஸ்லாவியா ஏற்றுக்கொண்டது!

பெல்கிரேட் ஜூன் 3

கொசோவோ நெருக்கடிக்குத் தீர்வு காண ஜி-8' என்ற தொழில்வள நாடுகளும், ரஷ்யாவும் முன்வைத்த சமாதானத் திட்டத்தை யூகோஸ்லாவியா ஏற்றுக்கொண்டுள்ளது.

யூகோஸ்லாவிய வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன. சமாதானத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறும் கடிதம் ஒன்றை யூகோஸ்லாவிய வெளிவிவகார அமைச்சர் ஜேர்மனியிடம் கையளித்துள்ளார்.

இந்தக் கடிதத்தின் முழு விபரமும் வெளியிடப்படவில்லை. 'நேட்டோ' வான் தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட்டு ராஜீக வழிமுறைகளிலான தீர்வில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



காட்கில் வான் தாக்குதல்கள் தொடர்பாக இந்திய விமானப் படைத் தளபதி எஸ். கே. மாலிக் பத்திரிகையாளர்களுக்கு விளக்குகிறார்.

## பறக்கும் காரில் இனி பவனி வரலாம்...!

லண்டன், ஜூன் 3

அமெரிக்காவில் உள்ள நிறுவனம் ஒன்று புதுவிதமான 'பறக்கும் காரை' பரீட்சித்து வருகிறது. இந்தக் காரின் வெள்ளோட்டம் இன்னும் சில தினங்களில் நடைபெறவுள்ளது.

இந்தக் காரின் அதிசயம் என்ன? இது மணிக்கு 600 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்யும்; ஆனால் தரையில் அல்ல; தரையில் இருந்து 6 அடி உயரத்தில் பறந்தே செல்லும் கார் இது.

இந்தக் காரில் நான்கு பேர் பயணம் செய்யலாம். கலிபோர்னியாவைச் சேர்ந்த பவுஸ் முல்லர் என்பவர் கடந்த 30 ஆண்டுகளாக நடத்திய ஆய்வை தொடர்ந்து இந்தப் 'பறக்கும் கார்' வடிவமைக்கப்பட்டது.

வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்ட பின்னர் இக் கார் 60 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட உள்ளது.

[ஐ]

## பிரான்ஸ் கண்டனம்

ஜம்மு காஷ்மீர் பகுதியில் ஊடுருவ முனையும் முயற்சியையும் இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை மீறிச் செல்லும் நடவடிக்கைகளையும் உடனடியாக பாகிஸ்தான் நிறுத்தவேண்டும் என ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பு நாடான

உலக அரங்கில்

பிரான்ஸ் கேட்டுள்ளது.

காட்கில் பகுதியில் இடம்பெற்றுவரும் யுத்த நிலைமைக்கு பாகிஸ்தானே காரணம் எனவும் பிரான்ஸ் தெரிவித்துள்ளது. (ஐ-க)

## பிடிபட்ட விமானிக்கு பிறந்தநாள் 'கேக்'

### இந்தியா அனுப்பியது

பாகிஸ்தானியப் படைகளால் சிறைப்பிடிக்கப்பட்ட இந்திய விமானப்படை 'மிக்' விமானத்தின் விமானியான பிளைற் லெப்டினன்ட் ஏ நாஸிகேத்தாவுக்கு இந்திய அதிகாரிகள் பிறந்த நாள் கேக் அனுப்பி உள்ளனர்.

கடந்த வியாழனன்று பாகிஸ்தான் கட்டுப்பாட்டு பகுதிக்குள் வீழ்ந்த 'மிக்—27' ரக விமானத்தில் இருந்த இவர் தற்சமயம் பாகிஸ்தானில் போர்க் கைதியாக உள்ளார். அவரை விடுவிக்குமாறு இந்தியா கோரி வருகிறது. அவரது பிறந்தநாளை ஒட்டி பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூரதகம் ஊடாக பிறந்தநாள் கேக்கும், வாழ்த்துக்களும் அனுப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## இந்திய ஷெல் வீச்சில் ஏழு சிறுவர்கள் பலி?

### பாகிஸ்தான் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், ஜூன் 3

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் பகுதிக்குள் இந்தியப் படைகள் நடத்திய ஷெல் வீச்சில் பள்ளிச் சிறுவர்கள் ஏழு பேர் பலியானதாக இஸ்லாமாபாத் தெரிவித்துள்ளது.

ஆனால் இந்தியா இக்குற்றச்சாட்டை அடியோடு மறுத்துள்ளது. ''இந்தச் செய்தி பாகிஸ்தானின் கற்பனையில் உதித்தது'' என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காஷ்மீர் எல்லைக்கு அருகே அமைந்த பாடசாலை மற்றும் குடியிருப்புக்கள் இந்தியாவின் ஷெல் வீச்சுக்கு இலக்கானதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஐ)

## ராணுவத்தில் சேர வில்லியம் விருப்பம்

பிரிட்டனின் இளவரசர் வில்லியம் ஆயுதப்படையில் சேர விருப்பம் தெரிவித்துள்ளார்— என அங்கு வெளியாகும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

டயானாவின் சகோதரரான ஏர்ள் ஸ்பென்சரை மேற்கோள் காட்டி இத் தகவலை அது வெளியிட்டிருக்கிறது. (ஐ)

## கொலைப்பட்டியலில் கருணாநிதி, ஸ்டாலின்!

சென்னை, ஜூன் 3

தீவிரவாதிகளின் கொலைப் பட்டியலில் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி அவரது மகனான மு. க. ஸ்டாலின் ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றிருப்பதாக மத்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

சில முக்கிய அரசியல் தலைவர்கள், அரச அதிகாரிகளின் பெயர்களும் அந்தப் பட்டியலில் இடம்பெற்றிருப்பதாக மத்திய உள்துறை அமைச்சு மாநில அரசை எச்சரித்துள்ளது.

தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் குண்டுத் தாக்குதல்களை நடத்த முஸ்லிம் தீவிரவாதிகள் முயன்றுவரும் வேளையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## காஷ்மீர் முறுகல் நிலைக்கு அமெரிக்காவே காரணம்!

### தலிபான் குற்றச்சாட்டு

காபூல், ஜூன் 3

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே காஷ்மீர் எல்லையில் பதற்ற நிலை அதிகரித்திருப்பதற்கு அமெரிக்காவே காரணம் என்று ஆப்கானிஸ்தானின் தலிபான் இயக்கம் குற்றஞ்சாட்டி உள்ளது.

தன்னைத்தவிர வேறெந்த நாடும் அணு வல்லரசாக மாறுவதை அமெரிக்கா விரும்பாது அதனால் பாகிஸ்தானிய கெரில்லாக்களுக்கு எதிராகப் போரிடத் தேவையான நிதியை அது இந்தியாவுக்கு வழங்கி இருக்கலாம் என்று தலிபான் தெரிவித்தது.

காஷ்மீரில் இந்திய இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த பின்னர் தலிபான் அது குறித்து வெளியிட்டுள்ள முதலாவது அறிக்கை இதுவாகும்.

இதேவேளை—

தற்போதைய நெருக்கடிக்கு அமைதியான வழியில் தீர்வுகாண பாகிஸ்தானும், இந்தியாவும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு உதவத் தயார் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

(ஐ)



மணலில் சிற்பங்களை அமைக்கும் சர்வதேச போட்டி கடந்த 27 ஆம்திகதி சிங்கப்பூருக்கு அருகே உள்ள சென்தோஸா தீவில் நடைபெற்றது

மணலில் உருவங்களை வடிவமைப்பதில் உலக அளவில் பிரபல்யம் பெற்ற 10 சிற்பிகளின் வடிவங்கள் போட்டித் தெரிவில் இடம்பெற்றன அவற்றில் முதல் பரிசைத் தட்டிச் சென்ற மணல் சிற்பம் இது

இதனை வடிவமைத்த சிற்பிக்கு 10 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பரிசாகக் கிடைத்தன. (ஐ)

## சோமாலியாவில் 28 பேர் மரணம்

மொகடிஸு ஜூன் 3

சோமாலியாவின் தென்மேற்குக் கிராமம் ஒன்றில் குஷேன் முகமத் அல்வீதுக்கு விசுவாசமான படைகள் நடத்திய தாக்குதலில் 21 பேர் வரை கொல்லப்பட்டனர். 28 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

சோமாலியாவின் பைடோவா என்ற மத்திய நகரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் அரச படைகளும் அல்வீதுவின் கிளர்ச்சிப் படைகளும் ஒரு வாரகாலமாக சண்டையில் ஈடுபட்டுள்ளனர் இந்த நடவடிக்கையின் போதே 28 பேர் கொல்லப்பட்டனர். (ஐ-க)

## 43 இந்தியப் படையினர் பலி!

புதுடில்லி. ஜூன் 3

காஷ்மீர் மலைப் பகுதியில் இடம்பெற்று வரும் சண்டையில் இதுவரை 43 இந்தியப் படையினர் பலியாகி இருப்பதாகவும், 173 படையினர் காயமடைந்திருப்பதாகவும் 12 பேர் காணமற் போயுள்ளதாகவும் இந்தியா அறிவித்துள்ளது. (ஐ)

## யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை

### பெர்னாண்டஸ் தெரிவிப்பு

புதுடில்லி. ஜூன் 3

காட்கில் பகுதியில் இருந்து பாகிஸ்தான் இராணுவம் உட்பட அனைத்து ஊடுருவல்காரர்களையும் இந்திய எல்லைக் கோட்டுக்கு அப்பால் விரட்டும் வரை யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் சர்ராஜ் அஸீசின் இந்தியப் பயணத்தின் போது ஏதாவது வகையிலான யுத்த நிறுத்தப் பேச்சுக்களை நடத்த இந்தியா தயாராக உள்ளதா என செய்தியாளர்கள் கேட்டபோதே பெர்னாண்டஸ் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடுருவல்காரர்கள் பாதுகாப்பாகத் திரும்பிச் செல்வதற்கு அனுமதி அளிப்பது தொடர்பாக அஸீஸுடன் தாம் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாகவும் பெர்னாண்டஸ் [illegible] தெரிவித்தார். (ஐ-க)

### குண்டுகள் மீட்கப்பட்டதை அடுத்து

## தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கைது!

புதுடில்லி, ஜூன் 3

தமிழ் நாட்டில் கடந்த சில நாள்களில் வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டதை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். [illegible] இவர்களில் பலர் அடிப்படைவாத அமைப்புக்களைச் சேர்ந்தோர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுரை நகரிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் 50-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் சிறுபான்மை இனங்களைச்சேர்ந்தோர் என்றும்—

தேங்காய்ப் பட்டினத்தில் சுமார் 20 பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்—

மாநிலத்தின் முக்கிய நகரங்கள், ரயில் நிலையங்கள் மற்றும் முக்கிய நிலைகள் ஆகியவற்றில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும்—

பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பொன்னம்பலம் சரவண பவன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல: 331690180V), விசேட அ: அட்டை இரண்டும் 1-6-99 காலை திருநெல்வேலிச் சந்திக்கும் அரசடி அம்மன் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன; கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திருநெல்வேலி ஸ்ரோர்ஸ், திருநெல்வேலிச்சந்தி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்; (66267)

கடந்த ஞாயிற்றுக்கிழமை (27-4-99) மீசாலைக்கும், புத்தூர்ச்சந்திக்குமிடையில் மூக்குக்கண்ணாடி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புத்தூர்ச்சந்தி, சன்ரவி கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்; (சி/7746)

30-05-99 அன்று மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த வேளையில் மாலுசந்திக்கும், பருத்தித்துறைக்கும் இடையில் எனது மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆ: மாணிக்கவாசகம், பிரசாந் நகைத்தொழிலகம், தும்பளை வீதி, பருத்தித்துறை என்னுமிடத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தகுந்தசன்மானம் வழங்கப்படும்; (சி/7755)

## புலமைப்பரிசில்

யாழ்: பிரபல ஆசிரியர் T: அம்பிகைபாகன் எழுதிய ''புலமைப்பரிசில் அடிப்படை அறிவும் பயிற்சியும்'' நூல் வெளிவந்துவிட்டது, விற்பனையாகின்றது. பக்கம் 250, அடிப்படை விளக்கம் (சகலபாடமும்) 30 பயிற்சிகள் (விடைகளுடன்) 20 மாதிரி கட்டுரைகள் 175 ரூபா மணியோடர் வெள்ளவத்தை தபாலகத்திற்கு எடுத்து T: அம்பிகைபாகன் 57/2B, W A: சில்வா மாவத்தை, கொழும்பு - 6 இற்கு அனுப்பினால் பார்சலில் புத்தகம் அனுப்பி வைக்கப்படும். T. P. 590423: (சி/7753)

## நாற்றுக்கள்

நல்ல இன கத்தரி நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அறவழிப் போராட்டக்குழு, கண்டி சாலை, கைதடி, நுணாவில், சாவகச்சேரி. (66246)

# போட்டிப்பரீட்சைக்கு உதவுவதற்கு நூல், பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, ஜூன் 3

இலங்கை அதிபர் சேவை தரம்I, தரம்II, தரம்III ஆகியவற்றுக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் நலன் கருதித் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் அனுசரணையுடன் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ: கணேசன் அவர்களால் போட்டிப்பரிட்சைக்குத் தேவையான கட்டுரைகள் அடங்கிய நூல் ஜூன் பத்தாம் திகதி வெளியிடப்படவுள்ளது;

அத்துடன் போட்டிப் பரீட்சையில் கலந்து கொள்ளவுள்ள தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் ஜூன் 15 ஆம் திகதி முதல் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது; (இ-117)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

####################

எமது ஆலய பரிபாலனசபைக் காரியதரிசியும், யாழ் பிரதேச செயலகத்தில் கடமையாற்றுபவருமாகிய

**பிரம்மஸ்ரீ சந்திரா ஸ்ரீபதி ஐயர் அவர்கள்**

சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்.

அரசடி விநாயகர் ஆலயம்,
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்; [66285]

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கிராமத்திலிருந்து முதன்முறையாக இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து வடமராட்சி கல்வி வலயத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பதவி ஏற்றிருக்கும் எமது மண்ணின் மைந்தன்

திருமிகு

**சிற்றம்பலம் புஸ்பலிங்கம்**

( B Com. Dip in Ed., S. L. E. A. S. )

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்;

மேன்மேலும் அவரது சேவை சிறப்புற அமைய எல்லாம் வல்ல கந்தவனம் பெருமாள் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்;

- பொலிகண்டி வாழ் பொதுமக்கள்

(சி/7754)

# தேவை

கீழ்க்காணும் நிறுவனத்துக்கு
அலுவலக உதவியாளர் (Office Assistant)
ஒருவர் தேவை

தகைமைகள்:

- ★ G. C. E. (A/L) இல் ஒரே அமர்வில் மூன்று பாடச் சித்தியுடன், G. C. E. (O/L) இல் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி (C)
- ★ ஆங்கிலத்தட்டச்சு (35 Wp. m), தமிழ் தட்டச்சு
- ★ கணனி இயக்கும் அறிவு

சம்பளம்: பேசித் தீர்க்கப்படும்;
விண்ணப்பங்களை கீழுள்ள முகவரிக்கு 20 - 06 - 99 இற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்;
வயதெல்லை: 35-க்கு கீழ்
எமது குருமடத்திலிருந்து 2 மைல் தூரத்துக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.

கல்விப் பொறுப்பாளர்

**புனித சவேரியார் குருமடம்**

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (66283)

# பாஷையூர் புனித அந்தோனியார் திருவிழா ஆனி - 1999

1999 - 06 - 04 ஆம் திகதி தொடக்கம்
1999 - 06 - 11 ஆம் திகதி வரை

## வழிபாடுகள்

மாலை 5:30 மணி திருச்செபமாலையைத் தொடர்ந்து திருப்பலி நடைபெறும்.

1999 - 06 - 12 ஆம் திகதி நற்கருணைவிழா
மாலை 5:15 மணி செபமாலை
5:30 மணி திருப்பலி
நற்கருணை வழிபாடு
நற்கருணைப் பவனி ஆசீர் நடைபெறும்.

1999 - 06 - 13 ஆம் திகதி
புனித அந்தோனியார் பெருவிழா
காலை 5:30 மணி 1 ஆம் திருப்பலி
காலை 7:00 மணி திருநாட் திருப்பலி
புனிதர் தேர்ப்பவனி ஆசீர் நடைபெறும்.

புதிய நேரப்படி- வழிபாடுகள் நடைபெறும்;

- பங்குத் தந்தை

(66288)

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதி அதிபர்
திருமதி சர்வேஸ்வரி சிறீகாந்தன்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்;

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழையமாணவர் சங்கம்.

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,
சண்டிலிப்பாய்; (66294)

# இதய அஞ்சலி

**திரு. இ. சிவபாலசுப்பிரமணியம் (பாப்பா)**

(உரிமையாளர், சிவாஸ் ஸ்ருடியோ)
அவர்களின் அன்புத் துணைவியார்

**திருமதி சி. ஜெயராணி**

திடீரென எம்மை விட்டுப் பிரிந்து எங்கு சென்றனையோ! உங்கள் ஆத்மா புதறானை ஸ்ரீசித்திவிநாயகர் பாதங்களை அடைய இறைஞ்சுகின்றோம்;

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

முகாமையாளர்

**சிவாஸ் ஸ்ருடியோ**

வட்டுக்கோட்டை.

(66290)

# வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்

நீர்வேலி

# பதவி வெற்றிடம்

இச் சங்கத்திலுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கான தகைமையுள்ள சங்க எல்லைப்பரப்பினுள் வசிக்கும் ஆண் விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பதவி:**
   கிளை முகாமையாளர்
   (தொழில் முன்னுரிமை பட்டியலில் வைப்பதற்கு)
2. **சம்பள அளவுத் திட்டம்:**
   கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 31/97இற் கமைய
3. **தகைமைகள்:**
   [அ] கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளரின் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்
   அல்லது
   [ஆ] கூட்டுறவுப்பணியாளர் [ சாதாரணம் ] பத்திரம் / க. பொ: த. [ சாதரரணத்தில் ] 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம் / தூய கணிதம், சிங்களம்/தமிழ் பாஷை என்பனவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களிலான சித்தி; சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்;
4. **வயதெல்லை:**
   18 தொடக்கம் 45 வருடங்கள் [183/90 சுற்றறிக்கைக்கமைய] [சங்கப்பணியாளருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது]
5. **விண்ணப்ப முடிவு திகதி: 25-06-99**
   விண்ணப்பப் படிவத்தினை ரூபா 5 செலுத்தி தலைமைக் கந்தோரில் பெற்றுக் கொள்ளவும்; பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் ''பொது முகாமையாளர், வலி.கிழக்கு தென்பகுதி ப: நோ. கூ. சங்கம், நீர்வேலி'' என்ற முகவரியில் நேரடியாகவோ அன்றேல் பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும்: விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

உடனடியாக நியமனம் வழங்கமுடியாது என்பதுடன் தேவையான போது நியமனம் செய்வதற்கு தொழில் முன்னுரிமைப் பட்டியலில் வைப்பதற்கே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தலைவர்.

நீர்வேலி:
02-06-99 [சி/7758]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடற்றொழில் பயிற்சிக் கல்லூரி

# 9 ஆண்டுகளாக இயங்காத நிலையில்!

## உபகரணங்கள் பயன்பாடின்றி முடக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
வடபகுதிக்கு எனக் கடந்த பல வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட கடற்றொழில் பயிற்சிக் கல்லூரி கடந்த 9 வருடங்களுக்கு மேலாக இயங்காத நிலையில் உள்ளது.

மேற்படி கல்லூரிக்குச் சொந்தமான பல லட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் பயிற்சி உபகரணங்களும் யாழ். நகரத்தில் மூன்றாம் குறுக்குத்தெருவில் உள்ள தனியார் வீடொன்றில் கவனிப்பாரற்ற நிலையில் எவ்வித பயன்பாடும் இன்றி இருப்பதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

கடற்றொழிற் பயிற்சிக் கல்லூரிக்கெனக் குருநகரில் அமைக்கப்பட்ட கட்டடம் கடந்தகால வன்செயல்களின் போது பலத்த சேதமடைந்ததைத் தொடர்ந்து அங்கிருந்த உபகரணங்கள் யாவும் பாதுகாப்பாக மூன்றாம் குறுக்குத்தெருவில் உள்ள தனியார் வீடொன்றுக்கு இடம் மாற்றப்பட்டது. அன்று தொடக்கம் கல்லூரியும் இயங்கவில்லை.

எனினும் மீளக்குடியமர்வின் பின் அதனை மீண்டும் இயக்குவது குறித்துக் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் ஆலோசகரும், ஈ.பி.ஆர்.எல்.எவ் வின் செயலாளர் நாயகமுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதாக 1996 ஆம் ஆண்டு பிற்பகுதியில் பத்திரிகைகள் மூலம் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

ஆனால் இதுவரை மேற்படி கல்லூரியை மீள இயக்குவது குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

(ஐ-7)

# நிர்வாக சேவைப் பரீட்சை ஞாயிறன்று நடைபெறும்

இலங்கை நிர்வாக சேவைக்குப் புதியவர்களை ஆள் சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நான்கு பரீட்சை நிலையங்களில் மேற்படி பரீட்சை நடைபெற இருப்பதாகவும்—

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் — யாழ்ப்பாணம் வலயக்கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை—

மேற்படி பரீட்சைக்குரிய வினாத்தாள்களைக் கொழும்பிலிருந்து யாழ். எடுத்து வருதல் மற்றும் பரீட்சை மண்டப ஒழுங்கு விடைத்தாள்களைக் கொழும்புக்கு எடுத்துச் செல்லுதல் ஆகிய பணிகளுக்குப் பொறுப்பாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-7)

# ஆரம்பக் கல்வி குறித்த அறிவு ஆசிரியர்களுக்கு இன்றியமையாதது

## நூல் வெளியீட்டு விழாவில் அறிவுறுத்து

நல்லூர், ஜூன் 3
இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து கல்வி வரலாற்றைப் பார்த்தால் ஆரம்பக்கல்விக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் குறைவாகவே உள்ளது. ஆரம்பக் கல்வியை உருவாக்கிய ஆசிரியர் கலாசாலைகள்பல மூடப்பட்டன. அதன் காரணமாக ஆசிரியர்களும் தொண்டர் ஆசிரியர்களும் ஆரம்பக்கல்வி குறித்து போதிய அறிவு கொண்டவர்களாக இருக்கவில்லை;

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா ஜெயராசா இவ்வாறு கூறினார்.

யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை எழுதிய ''ஆரம்பக் கல்வி'' என்ற நூலின் வெளியீட்டு விழா கு. சண்முகநாதன் தலைமையில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கலாநிதி சபா. ஜெயராசா மேலும்பேசும் போது கூறியதாவது-

தென்னிலங்கை போல் இங்கு ஆரம்பக்கல்வி விரிவடையவில்லை. உறுதியான வினைத்திறன்கொண்ட கூட்டமைப்பு இன்மையால் ஜீ.சி.ஈ. படிப்பவர்களிடம் கூட எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. மேல் நாடுகளில் ஆரம்பக் கல்வி ஆசிரியர் பணிக்கு பட்டதாரிகளே நியமிக்கப்படுகின்றனர். அந்த நிலை இங்கும் உருவாக வேண்டும்.

இந்திய தேசியக்கொள்கையில் இந்தியாவின் வெற்றிக்குக் காரணமாக இருக்கப் போவது ஆரம்பக் கல்வி என்பதால் அதில் கவனம் செலுத்த வேண்டும் என்று முடிவெடுத்துள்ளார்கள்;

வளர்ந்தவர்களுக்கான நூல்கள் அதிகம் வெளிவருகின்றன. சிறுவர்களுக்கு உகந்த நூல்கள் அதிகமாக வெளிவர வேண்டும்.

தென்னிலங்கையிலும் பார்க்க எமது முன்பள்ளிகள் மிகவும் கஷ்டமான நிலையில் உள்ளன. இவற்றுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவிகள் தேவை. இந்த நூல் ஓர் அகல்விதி ஆக்கம் கொண்டதாக அனைத்தையும் உள்ளடக்கி வெளி வந்துள்ளது. கலாநிதி அவர்கள் ஒரு கல்விப்பணிப்பாளராக இருந்து கொண்டு ஆரம்பக் கல்வி குறித்து எழுதியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது — என்றார்.

சண்முகநாதன் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

ஏற்கனவே கல்வி தொடர்பான நூல்களை எழுதிய கலாநிதி தணிகாசலம் பிள்ளையின் இந்நூல் யாழ். மண்ணில் அவரது வெளியீடாக வருகின்றது. தேசிய கல்வி நெறி டிப்ளோமாப் பயிற்சியை யாழ் நகருக்கு கொண்டுவந்த அவர் யாழ்ப்பாணத்தில் பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பெறாமலிருப்பதை மாற்றியமைக்க உதவினார். தனிமனிதனாக அவரிடம் காணப்படும் சிந்தனைகளை அறிந்து பட்டதாரி ஆசிரியர் வாண்மை அபிவிருத்தி சபையினராகிய நாம் இந்த நூலை வெளியிட்டோம்.

ஆரம்பக்கல்வியை செப்பனிடப்படாதுவிடின் கல்வி முன்னேறாது. ஆரம்பக் கல்வியை உதாசீனம் செய்யும் யாழ்ப்பாண ஆசிரியர் சமூகம் அது பற்றிச் சிந்திக்காதுவிடின் யாழ்ப்பாணம் கல்வியில் பின்னடைவு காணும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நாம் மதிக்க வேண்டியது ஆரம்பக்கல்வி ஆசிரியரையே என்று எப்போது நினைக்கின்றோமோ அன்றுதான் எமது சமூகம் முன்னேறும்.

ஆரம்பக் கல்வியைக் கட்டியெழுப்பும் சிந்தனையையும் புதிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் இந்த நூல் வெளிவந்துள்ளது — என்றார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சண்முகதாஸ் பேசும் போது கூறியதாவது:

கலாநிதி தணிகாசலம் பிள்ளை எமது பல்கலைக்கழகத்தில் கல்வி குறித்த முக்கிய ஆய்வுகளைச் செய்துள்ளார். உலகில் எதைஎடுத்தாலும் எந்தக் கல்விநெறியாக இருந்தாலும் அதற்கு முகாமைத்துவம் இன்றியமையாதது கல்வியில் முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து கல்வி அமைச்சே சிந்திக்கிறது.

இன்றிருக்கும் நிலையில் இளைஞர்களுக்கு எது தேவை என்பதைச் சிந்தித்து அவர்களுக்குக்கல்வி வழங்க வேண்டும். எனவே ஆரம்பக்கல்வி சார்பாக திட்டமிட்டு அவர்களை வளப்படுத்த வேண்டும். இவரது நூல் பிள்ளைகளின் வருங்காலத்தைச் சிந்திக்கிறது — என்றார்.

கலாநிதி தணிகாசலம் பிள்ளை தமது பதிலுரையில் கூறியதாவது:

எனது குரு செல்லையா ஆசிரியர் அவர்கள் ஆரம்பக் கல்வியில் கொண்டிருந்த ஈடுபாட்டை இன்றுள்ளவர்களில் காணமுடியவில்லை. வறுமையைப் போக்கும் ஆயுதம் கல்வி; புத்தகங்களைப் படிக்கும் ஆர்வமும் கல்வியில் அக்கறையும் மாணவர்களுக்குத் தேவை. கற்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவரே வாழ்க்கையில் முன்னேற முடியும்.

நான் பூநகரியில் அதிபராகப் பணியாற்றியபோதுதான் ஆரம்பக்கல்வி பற்றிச் சிந்தித்தேன்.

பின்தங்கிய பகுதிகளில் கடமையாற்றும்போது தான் ஆரம்பக்கல்வியின் முக்கியத்துவத்தை விளங்க முடியும் ஆசிரியர்கள், அதிபர்கள் அடிப்படைக்கல்வி நிர்வாகிகளாக மாறவேண்டும் என்பது எனது எண்ணம் இந்த நூல் இன்னும் ஆழமாக அகலமாக விரிவுபடுத்தப்படவேண்டும் அதற்கு முடிந்தவரை அக்கறை எடுப்பேன் ஏனையோரும் முன்மாதிரியாக எழுத வேண்டும் - என்றார்.

நூலாசிரியரிடமிருந்து [illegible] நூலின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

[ஐ-103]

### யாழ். பல்கலைக் கழக

# முகாமைத்துவ ஆய்வு நிலையம் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ். பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவபீடத்தின் முகாமைத்துவ ஆய்வு நிலையம் நவீன வசதிகள் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள ஜப்பான் நாட்டு தூதரகம் வழங்கிய 17 கணனிகள் இந்த ஆய்வு நிலையத்தில் பொருத்தப்பட்டு முகாமைத்துவ மாணவர்கள் செயன்முறைக் கற்கை நெறிகளில் ஈடுபடுவதற்கானவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுமார் நூறு மாணவர்கள் ஒரே நேரத்தில் இருந்து கல்வி கற்கக் கூடிய வகையில் விரிவுரைமண்டபமும் பல வசதிகள் கொண்டதாகப் புனரமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

### தெல்லிப்பழையில் உள்ள

# மனநோய்ச் சிகிச்சைப் பிரிவில் மருத்துவ மாணவர் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 16 ஆம் அணி மாணவர்கள் கடந்த மாத இறுதியில் தெல்லிப்பழை மனநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

மனநோயாளர் சிகிச்சைப் பிரிவில் உள்ள மருத்துவ மாணவர்களின் விரிவுரை மண்டபம் மாணவர்களால் சிரமதானம் மூலம் வர்ணம் பூசி மெருகுபடுத்தப்பட்டது.

இச்சிகிச்சைப் பிரிவில் பணியாற்றுகின்ற வைத்திய கலாநிதி ச. சிவயோகனும் இந்த சிரமதானத்தில் கலந்து கொண்டார்.

ஈ. எஸ். பேரம்பலம் நிறுவன ஆதரவுடன் இந்தச் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது.

[ஐ]

# 152 பொதிகளில் தபால்கள் வந்தன

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 152 தபாற்பொதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டன.

இதேவேளை —

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 35 தபாற்பொதிகள் இதே கப்பல் மூலம் நேற்று திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்று எடுத்து வரப்பட்ட தபாற்பொதிகள் யாவும் இன்று முதல் தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் என யாழ். பிரதம தபாலதிபர் க. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

[ஐ-7]

# மானிப்பாய் இந்துவில் தளபாடப் பற்றாக்குறை

சண்டிலிப்பாய், ஜூன் 3
மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மாணவர்களுக்கான தளபாடப் பற்றாக்குறை நிலவி வருகின்றது இதனால் வகுப்பறைகளில் வாங்குகளில் மாணவர்கள் மிகவும் நெருக்கமாக உட்கார்ந்து படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை —

ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியருக்கும் இக் கல்லூரியில் பற்றாக்குறை நிலவி வருகின்றது. மூன்று ஆங்கில ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டியிருந்தும் ஒருவர் மட்டுமே இங்கு கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

# 'மறுமலர்ச்சி' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ். பல்கலைக் கழக தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன் மறுமலர்ச்சி இலக்கிய மன்றம் வெளியிடும் 'மறுமலர்ச்சி' சஞ்சிகை வெளியீட்டு விழா எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக் கழக நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் நூல் அறிமுகவுரையை மறுமலர்ச்சி சஞ்சிகையின் இணை ஆசிரியர் 'சிற்பி' சிவசரவணபவனும், வெளியீட்டுரையை தமிழ்த்துறை முது நிலை விரிவுரையாளர் பேராசிரியர் நா. சுப்பிரமணியனும், சிறப்புரையை மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கமும் மதிப்புரையை தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா மற்றும் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளை முகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசமும் நிகழ்த்துவர்.

ஏற்புரையை மறுமலர்ச்சி சஞ்சிகை ஆசிரியர் வரதரும், நன்றியுரையை மறுமலர்ச்சி இணையாசிரியர் செங்கை ஆழியானும் நிகழ்த்துவர்.

(ஐ-7)

# முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ். செயலக நிறுவை அளவைத் திணைக்களம் பிரதி புதன்கிழமை தோறும் காலை 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 1-30 மணி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணியை மேற்கொண்டு வருகிறது.


இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யாழ். மாவட்டத்தில் இது வரை தத்தமது நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடாத சகல சந்தை வியாபாரிகள், கடை உரிமையாளர்கள், மில் உரிமையாளர்கள், பேக்கரி உரிமையாளர்கள், விறகுகாலையைச் சேர்ந்தவர்கள் தராசுப்படிகளுக்கும் நிறுவை - அளவை உபகரணங்களுக்கும் தவறாது முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ் செயலகநிறுவை அளவைத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

முத்திரையிடத் தவறுவோர் மீது திணைக்கள ஊழியர்களின் திடீர்ப் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டால் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

(ஐ 30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 26 – 11 – 1927

இறப்பு 13 – 06 – 1998

### அமரர் மாரிமுத்து சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

திதி: 03 - 06 - 1999

ஓராண்டு அல்ல ஓராயிரம் ஆண்டு சென்றாலும் நீங்கள் காட்டிய பாதை வழியே நடப்போம்.

உங்கள் பிரிவால் வாடும்:
**குடும்பத்தினர்.**

இந்துக் கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(66258)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 12 – 10 – 1912

மறைவு 04 – 05 – 1999

ஸ்ரீமதி

### அன்னப்பிள்ளை கதிரித்தம்பி

மெழுகுவர்த்தியாய் உருகி எமக்கு ஒளிதந்த அன்னையே!

தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,

ஐயா கடையடி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

(66266)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

[ 03 – 06 – 1999 ]



மண்ணில் 10 – 8 – 1928

விண்ணில் 03 – 05 – 1999

அமரர்

### செல்லையா கிருஷ்ணசாமி

[ சன்னதி வீதி, அச்சுவேலி ]

"ஆலம் விழுதுகள் போல் உறவு ஆயிரம்
வந்துமென்ன. வேரென நீயிருந்தால்
வீழ்ந்து விடாதிருப்போம்"

எங்கள் குடும்ப விளக்காயிருந்து நாம் நல்வாழ்வு வாழ வழிகாட்டிய அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

36/9, மணல்தறை
ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**திருமதி கிருஷ்ணசாமியும்,**
**குடுப்பத்தினரும்.**

(66093)

## கூடைப்பந்துப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை 'உதயன்' நிறுவன அனுசரணையுடன் பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் ஆண்கள் பிரிவு ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு –

★ பிற்பகல் 4. 00 மணி— பல்கலைக்கழக அணி எதிர் ஒல்ட் கோல்ட்ஸ் வி. க. அணி.

★ பிற்பகல் 5. 00 மணி— சென்றலைற்ஸ் வி. க. அணி எதிர் பற்றீசியன் வி. க. அணி. (க)

## ஆசிரியர் சங்க புனருத்தாரண கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் காங்கேசன் துறைக் கிளைச் சங்கத்தின் புனருத்தாரணக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தனும் கலந்து கொள்வர்.

அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் கேட்டுள்ளார். (ஐ)

## கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, ஜூன் 3

டபிள்யூ எச். சி. நிறுவனத்தின் அனுசரணையுடன பாடசாலை ஆசிரியர்களுக்கிடையிலான சமூக உளவியல் கருத்தரங்குஒன்று எதிர்வரும் சனிக்கிழமை காலை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

தொடர்ந்து ஐந்து சனிக்கிழமைகளில் மேறபடிகருத்தரங்கு நடைபெறும் என வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராஜா அறிவித்துள்ளார். (இ 152)

## மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நாளை வெள்ளிக்கிழமை முதல் நடைபெறவுள்ள தமிழ்மொழித் தினபபோட்டிகளில் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் தமது வலயத்துக்குட்பட்ட மாணவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

போட்டியாளர்கள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்துக்கு போட்டி நடைபெறும் நிலையங்களுக்கு சமுகம் அளித்தல் வேண்டும். எனவும் —

எந்தவொரு போட்டிகளிலும் மாணவர்கள் தவறாது பங்கு பற்றவேண்டும் எனவும் —

அவர் கேட்டுள்ளார்.

மாவட்டமட்டத் தமிழ்த் தினப்போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும், மாகாண, மாவட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டி எதிர் வரும் 7 ஆம் திகதி திங்கட் கிழமை வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவிருப்பதாக தெரிந்ததே. (ஐ-7-51)

## பிரத்தியேக வகுப்புகள்!

# LOGIC

* A/L 1999 துரிதமீட்டல் வினாவிடை வகுப்பு. பகுதி II முழுமையாகக் கற்பிக்கப்படும்.
* 2000, 2001 தொடக்கத்திலிருந்து கற்பிக்கப் படும்.
* ஆரம்பம்: 05 - 06 - 1999 காலை 7 மணி

ஆசிரியர்: எஸ் எஸ். மனோகரன்

11, குருசோ வீதி, சுண்டுக்குளி.

(66278) (ஆசனக் கோயிலுக்கு அருகில்)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 25 – 05 – 1920

விண்ணில் 04 – 05 – 1999

திருமதி

### சீனித்தம்பி மாகிறேற் சிவபாக்கியம்

[முன்னாள் யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்]

04 - 05 - 1999 செவ்வாய்க்கிழமை மானிப்பாயில் இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்ப விளக்கு திருமதி சீனித்தம்பி மாகிறேற் அவர்களின் 31 ஆவது நினைவு நாளை நினைவு கூருகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

**சகோதரி, நண்பர் மகள்மார்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

சாத்தாவத்தை வைரவர் கோயிலடி,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(66272)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

(03 - 06 - 1999)



அன்னையின் மடியில் 05 – 04 – 1925

ஆண்டவன் திருவடியில் 03 – 05 – 1999

அமரர் சிவாச்சாரியதிலகம்

### இராசரத்தினக்குருக்கள் இரத்தினசபாபதிக்குருக்கள்

ஒரு நொடியில் பிரிந்ததையா
உமது உயிர்
தனியனாய் தவிக்கின்றோம்
தங்கள் முகம் காணாமல்
ஆடி அடங்கும் வாழ்க்கையையா?
அமைதி கொண்டீரோ? எம்மைவிட்டு
இறைவன் பாதத்தில் சந்திக்கும் வரை
நீங்காத நினைவுடன் வாழ்கின்றோம்.

03—05—1999 இல் நடந்த அன்னாரின் இறுதிக் கிரியைகளிலும் ஏனைய நாள்களிலும் பங்குபற்றி உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர், ஆதரவாளர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

தகவல்
இ. கேதீஸ்வரக்குருக்கள்.
சம்பந்தப் பிள்ளையார் கோயில்,
சங்கரபபிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

(சி/ 7738)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மக்கள் நலன்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு பாதுகாப்புத் தராவிடில் — அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஏற்புடைய திட்டம் ஒன்றை அரசாங்கம் முன்வைக்காவிடில் — தமது கட்சியைச் சேர்ந்த உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பதவி விலகுவார்கள் என்று புளொட் அமைப்பு அறிவித்துள்ளது.

பாதுகாப்புத்திட்டத்தை உருவாக்கி செயலாக்குவதற்கு அரசாங்கத்துக்கு ஒருமாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனை பிரஸ்தாப அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ் கிருபைராஜா தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கான சூழ்நிலை இல்லாத வேளையில், உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில் அரசாங்கத்துக்கு இருந்த அவசரமும் ஆர்வமும், உள்ளூராட்சி உறுப்பினருக்குப் பாதுகாப்பு வழங்குவதில் இல்லை புளொட் மாவட்ட அமைப்பாளரின் அறிக்கையிலும் இது குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையின் இரு மேயர்கள் உட்பட உள்ளூராட்சி உறுப்பினர்கள் மொத்தம் பத்துப்பேர் இதுவரையில் குடாநாட்டில் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் இவ்விவகாரம் ஜனாதிபதி வரைக்கும் எடுத்துச் செல்லப்பட்ட போதிலும், இதுவரையில் உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய உருப்படியான நடைமுறை எதுவும் அமுல் செய்யப்படவில்லை. பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் சில யோசனைகள். திட்டங்களைத் தெரிவித்த போதிலும் எதுவும் நடைமுறைக்கு வரவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றிவிட்டோம். சிவில் நிர்வாகம் நடத்துகிறோம் என்று கூறுவதில் அரசு இன்பம் காண்கிறது — இலாபம் அடைகின்றது. ஆனால் தாம் பாதுகாப்பாக உள்ளனர் என்ற உணர்வை மக்களிடம் உண்டாக்கமுடியவில்லை.

அது போன்றே, உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதிலும் உறுதியான நடவடிக்கை எதுவும் இதுவரை இல்லை. குடா நாட்டில் சிவில் நிர்வாகத்தைப் பலவீனமாக்கும் முயற்சி வெற்றி அடைந்துள்ளமைக்கும் அதுவே காரணம்.

அரச அலுவலகங்களை மூடி வேலை நாள்களைக் குறைப்பது, ஹர்த்தால் நடத்தி வர்த்தக நிலையங்கள் பாடசாலைகளை மூடுவது என்பன அவை எந்த நோக்கத்திற்காகச் செய்யப்படினும் பொது மக்களுக்குரிய சேவைகளுக்கே குந்தகம் விளைவிக்கும்.

மொத்தத்தில் எல்லாத் தரப்பினரும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் விளைவுகளை — அவை நல்லதோ கெட்டதோ, சரியோ பிழையோ — மக்களே இடையில் நின்று அனுபவிக்க நேர்கிறது. இதனைச் சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களும் உணர்ந்து மக்கள் நலனை முன்னிறுத்தி முன்னுரிமை கொடுக்குமாறு மக்கள் சார்பில் வேண்டுகிறோம்.

### படையினரிடம் சரணடைந்த

# ஐந்து தமிழ் இளைஞர் தெல்லிப்பழைக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

படையினரிடம் சரணடைந்து பண்டாரவளை புனர்வாழ்வுமுகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் 5பேர் கடந்த வாரம்தெல்லிப்பழையிலுள்ள புனர்வாழ்வு நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

★ தங்கவேலு பாஸ்கரன் [வயது 20 கிளாலி, எழுதுமட்டுவான்],

★ கிருஷ்ணன் மோகனராஜா [வயது24 இராசாவின் தோட்டம் யாழ்.]

★ நித்தியானந்தன் நித்திய பவிதன் (வயது 19, பால்பண்ணைவீதி, திருநெல்வேலி]

★ விக்கினேஸ்வரன் மதன [வயது 16, கடற்கரை வீதி, பருத்தித்துறை)

★ பத்மநாதன் சதீஸ்குமார் (வயது 17, தபாலக வீதி, மாதகல்)

ஆகியோரே இடமாற்றம் செய்யப்பட்டவர்களாவர்.

[ஐ-5]

# சமஸ்கிருதக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 3

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சமஸ்கிருதத்தை ஒரு பாடமாகக் கொண்டு கல்வி கற்கும் மாணவர்களின் நன்மை கருதி விசேட கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் க. கனகராசா தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத் தலைவர் திருமதி க. இராமநாதன் நிகழ்த்துவார்.

'சமஸ்கிருத மொழி அறிவு ஏன்? எதற்கு?' என்ற தலைப்பில் இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயரும்

'வரலாற்று நோக்கில்சமஸ்கிருதம்' என்ற தலைப்பில் பேராசிரியர் வி. சிவசாமியும்—

''இலக்கிய நோக்கில் சமஸ்கிருதம்' என்ற தலைப்பில் விரிவுரையாளர் திருமதி ஸ்ரீகலா ஜெகந்நாதனும், —

'மொழியியல் நோக்கில் சமஸ்கிருதம்' என்ற தலைப்பில் விரிவுரையாளர் ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மாவும்—

'சமஸ்கிருத மொழிசார்ந்த அறிவுப் பரம்பலுக்கு உதவிய அறிஞர்கள்' என்ற தலைப்பில் பேராசிரியர் வி. சிவசாமியும்—

கருத்துரை வழங்குவர்.

(ஐ-7)

# பனம் கைப்பணிப் பயிற்சி நிலையம் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3

பனை அபிவிருத்திச்சபையினால் பனம் கைப்பணி வடிவமைப்பு நிலையம் ஒன்று யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நேற்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க உத்தியோகத்தர் கே. ஜீ. தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சபையின் பொது முகாமையாளர் சோ. கோகுலதாசன் மேற்படி நிலையத்தினைத் திறந்து வைத்தார்.

இந்நிலையத்தில் பனம் கைப்பணிப்பயிற்சி, பனம் பொருள்களைக் கொண்ட நவீன தயாரிப்புகள் உட்படப் பல பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிலையத்தில் பயிற்சி பெற விரும்புபவர்கள் சபையின் தலைமைக்காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

(ஐ-5)

## நாளை

வைகாசி 21

வெள்ளிக்கிழமை

திதி: பஞ்சமி
மாலை 6. 24 வரை
நட்சத்திரம்: திருவோணம்
பின் இரவு 1.33 வரை
சுபநேரம்: 5.52-7.22
ராகுகாலம்: 10 22 11.52
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி]

## உதயவாக்கு

தங்கக்கம்பியின் இழையில் எவ்வளவு மதிப்புள்ளதோ, அவ்வளவு மதிப்பு ஒவ்வொரு நிமிடத்திற்கும் உண்டு.

— ஜே. மேஸன்

## சாயி சிந்தனை

சிறந்த பக்தர்கள் இவ்வாறு வேண்டுவார்கள் ''நீங்கள் கொடுத்த இதயத்தை உங்களுக்கே திரும்பக் கொடுக்கிறேன்; வேறு எந்த விதத்தில் நான் தங்களை வழிபட முடியும்? கூப்பிய கரங்களுடன் தாங்கள் எனக்கு அளித்த அனைத்தையும் நான் தங்களுக்கே திரும்ப அளிக்கிறேன்'' இதுவே தயாகத்தின் உண்மையான சாரம். இதுவே உண்மையான பக்தி, முறையான நிறைவு. இதைவிட உயர்ந்ததும், மதிப்பு மிக்கதும் ஆன வேறெதுவுமில்லை.

வைரத்துக்கும், தங்கத்துக்கும் உயர்ந்த மதிப்பு உண்டு என்று கூறப்படுகிறது. இத்தகைய மதிப்பை அவற்றிற்கு அளித்தது யார்? மனிதனே. மனிதன் உலகத்திலுள்ள எல்லாச் செல்வங்களையும் விட மதிப்பு அதிகம் உள்ளவன். இக்காலத்தில் மனிதனின் மதிப்பு இறங்கிக்கொண்டே வருகிறது. அவனது மதிப்பை எவ்வாறு உயர்த்துவது? அவன் தன் ஆசைகளைக் குறைத்துக்கொண்டால், அவனது மதிப்பு உயரும்.

(ஆதாரம்: சாயி அருளமுதம்)

## வாசகர் திருமுகம்

# எமது நிலையும் அதுவே

''பத்தமேனிக்கு உதவிக்கரம் நீளாதா?'' என்ற தலைப்பில் கடந்த 27 ஆம் திகதிய உதயனின் வாசகர் திருமுகப்பகுதியில் பத்தமேனி இளங்கதிர் சனசமூக நிலையத்தலைவரால் எழுதப்பட்டிருந்தது.

பத்தமேனியைப் போலவே எமது கதிரிப்பாய்க் கிராமம் விவசாயம் மற்றும் பல்வேறு தொழில்கள் செய்துவரும் மக்கள் வாழும்பகுதி.

1990 ஆம் ஆண்டுக்கு பின்னர் இடம் பெற்ற பல்வேறு தாக்குதல் சம்பவங்கள் காரணமாக பத்தமேனியைப் போலவே இங்குள்ள பாடசாலைகள், வீடுகள் மற்றும் பொதுக்கட்டடங்கள், விவசாய நிலங்கள் அழிவடைந்தன.

மீளக்குடியமர்வின் பின்னர் எமது கிராமத்தை பாதிக்கப்பட்ட வலயம் எனப்பிரகடனப்படுத்தி புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இளங்கதிர் சனசமூக நிலையத் தலைவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

1996 ஆம் ஆண்டு படையினர் எமது கிராமத்தில் குடியிருக்க அனுமதித்தது முதல் அங்குவசிப்பவன் என்ற முறையில் அங்கு எந்தவிதமான புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப் படவில்லை என்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன். அதனை ஆதாரத்துடன் நிரூபிக்கவும் முடியும்.

எமது பகுதியில் பாடசாலை அபிவிருத்தியோ அல்லது சனசமூகநிலைய அபிவிருத்தியோ மேற்கொள்ளப்படவில்லை. வீதிகள் யாவும் பெரும் கிடங்குகளாகக் காணப்படுகின்றன.

இந்நிலையில் எமது கிராமத்தில் செய்யாத அபிவிருத்தி வேலைகளை செய்ததாகக் கூறுவதனால் இனி வருங்காலங்களில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் புனரமைப்பு வேலைகளுக்கு தடைகள் ஏதும் ஏற்படுவதற்கு வய்ப்பு உண்டு எனக்கருதுகின்றேன்.

தமக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக ஏனையவர்களுக்கு கிடைப்பதாகச் சுட்டிக்காட்டுவது பொருத்த மற்றது எனக்கருதுகிறேன்.

கதிரிப்பாய் — சு. விக்னேஸ்வரராஜா

# ஆங்கில தினமும் குளறுபடியும்

இந்த ஆண்டு பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆங்கில தினச் சுற்றறிக்கையில் 2000 ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்கள் ஆண்டு 13க்கு உரிய நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை சென்ற ஆண்டில் (98இல்) 1999 உயர் வகுப்பு மாணவர்கள் ஆண்டு 13க்கு உரிய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியதற்காக வலய மட்டத்தில் அவர்கள் நிராகரிக்கப் பட்டிருந்தனர். அதற்குக் காரணம் என்ன? என்று விளக்கம் கேட்டுச் சென்ற அதிபர்களுக்கு கல்வியதிகாரிகள் கூறிய விளக்கம்: 'அம் மாணவர்கள் 1998 செப்ரெம்பரின் பின்னர்தான் ஆண்டு 13-க்கு வகுப்பேற்றப்படுவார்கள். அது வரையும் அவர்கள் ஆண்டு 12 தான்'' என்பதே.

அப்படியாயின் 1999இல் மட்டும் செப்ரெம்பரின் முன்பே 2000 உயர்தரப் பிரிவு மாணவர்கள் ஆண்டு 13-க்கு வகுப்பேற்றப்பட்டு விட்டனரா? அத்துடன் 1999 உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கு சுற்று நிருபத்தில் சந்தர்ப்பமே கொடுக்கப்படவில்லை.

சென்ற வருடம் ஆண்டு 13-க்கு உரிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய 1999ஆம் ஆண்டு உயர்தரப்பிரிவு மாணவர்கள் வயதில் குறைந்தவர்களாய் இருந்து வயது கூடிய குழுவினருடன் போட்டியிட்டு அவர்கள் பெற்ற இடங்களை நிராகரிக்காதீர்கள் என அதிபர்கள் வேண்டுகோள் விடுத்தமைக்கு 'அம் மாணவர்கள் வேறு மாணவர்களின் சந்தர்ப்பத்தைத் தட்டிப் பறிக்க இடங்கொடுக்கக் கூடாது, அவர்கள் தகுதியற்றவர்களே' என ஆணித்தரமாகக் கூறிய கல்வி அதிகாரிகளுக்கு, இவ்வருடம் மட்டும் 2000 உயர்தரப் பிரிவு ஆண்டு 13 ஆகத் தெரிகிறது?

முதன்மை இடங்களைப் பெற்றும், பிரிவு மாறிப் பங்குபற்றியவர்கள் என நிராகரிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் அதிபர்களை அணுகி விசாரித்த பொழுது — ''ஒவ்வொரு வருடமும் இந்தப் பிரிவின்படியே மாணவர்களை பங்குபற்ற வைப்பது வழக்கம். அனுப்பப்பட்ட ஆங்கில தினச் சுற்று நிருபத்தில உயர்தரப் பிரிவினரை எந்த ஆண்டிற்குரியவர்கள் எனக் குறித்து அனுப்பவில்லை.

''அடுத்த வருடம் விழாக்குழுவினர் கூறியவாறு விண்ணப்பங்களை அனுப்பி உங்கள் பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் கிடைக்கச் செய்கிறோம்'' — என்று மிகவும் மனவருத்தத்துடன் சமாதானம் கூறினார்கள்.

ஆனால் இந்த வருடம் அம் மாணவர்களுக்கு போட்டியில் பங்கு பற்றச் சந்தர்ப்பமே இல்லாமல் ஆக்கப்பட்டுவிட்டது. எனவே போட்டிகள் மாணவர்களுக்காகவா? அல்லது கல்வியதிகாரிகளின் காலத்திற்கு காலம் மாறும் நோக்கங்களுக்காகவா என்பதனைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

''கூ. நந்தன்''

சண்டிலிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தரோடை இக்கிராலை

# அகதிமுகாமில் மலசல கூட வசதி இன்றி துர்நாற்றம்

சண்டிலிப்பாய் ஜூன் 3

சந்தரோடை இக்கிராலை இடம் பெயர்ந்தோர் அகதி முகாமில் மலசலகூடம் எதுவும் இதுவரை இல்லாததினால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடு சூழல் சுகாதாரமும் பாதிக்கபபட்டு வருவதாகப் புகார் தெரிவிக்கப் படுகின்றது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் தற்போது நடைபெற்று வரும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஆய்வுப் பட்டறையில் கலந்து கொண்ட குழுவினர் வெளிக்கள சுகாதார நிலைமைகளை ஆய்வ செய்வதற்காக நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமையன்று இந்த அகதி முகாமுக்கு நேரில் சென்றிருந்தபோது இங்கு நிலவும் சுகாதார சீர்கேடுகளையும், துர்நாற்றத்தையும் நேரில் கண்டனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து இங்கு செயற்பட்டு வரும் இந்த இடம் பெயர்ந்தோர் அகதி முகாமில் இதுவரை மல சல கூடம் எதுவும் அமைக்கப்படாது இருப்பது மேற்படி குழுவினரால் கண்டறியப்பட்டுள்ளது.

இம் முகாமுக்கு மிகவும் சமீபமாகவுள்ள கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் இந்த முகாமிலிருந்து வரும் துர்நாற்றத்தினாலும், சுகாதார சீர்கேடுகளாலும் பாதிக்கப்பட்டு வருவதையும் இக் குழுவினர் நேரடியாக அவதானித்தனர். வலி. வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 24 குடும்பங்கள் தங்கள் சொந்த இடங்களில் சென்று மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்படாமையால் இம்முகாமில் தொடர்ந்தும் வசித்து வருகின்றன.

இம் முகாமில் உடனடியாக தற்காலிக மலசல கூடங்களாவது நிறுவப்பட வேண்டும் என்றும் இல்லாது விட்டால் சுற்றாடல் சுகாதாரம் பாதிக்கப்பட்டு தொற்று நோய்கள் பரவும் அபாய நிலை ஏற்படும் என்றும் இக்குழுவில் சென்ற வைத்திய அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர்.

[ஐ-135]

## செயலமர்வு

கொக்குவில், ஜூன்

மிதிவெடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வுகள் யுனிசெவ் நிறுவனத்தினால் கல்வித்திணைக்களத்தினூடாக பாடசாலை ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றன;

மிதிவெடி இருக்குமிடங்களை இனங்காணல் வெடிக்கும் பொருள்களைப் பற்றி அறிதல் இவற்றைக்கண்டால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், மிதி வெடியால் பாதிக்கப்பட்டோருக்குச் செய்ய வேண்டிய முதலுதவிகள் போன்ற விடயங்கள் இச் செயலமர்வுகளில் போதிக்கப் படுகின்றன. (ஐ-69)



வெசாக் பண்டிகையை ஒட்டி பருத்தித்துறை 524 ஆவது பிரிகேட்டினால் பருத்தித்துறையில் பல இடங்களில் வெசாக் பந்தல்கள் அமைக்கப் பட்டன. மாலுசந்தியில் அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தல்களை படத்தில் காணலாம்.

(ஐ)

# சில்லறை நாணய தட்டுப்பாட்டினால் பணக் கொடுக்கல்வாங்கலில் பாதிப்பு!

திருநெல்வேலி, ஜூன் 3

யாழ். மாவட்டத்தில் சில்லறைக் காசுகளுக்கு நிலவும் கடும் தட்டுப்பாடு நீடித்து வருவதால் பொதுமக்களும், வர்த்தகர்களும் மிகுந்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

வர்த்தக நிலையங்களிலும், சந்தைகளிலும் 25 சதம், 50 சதம், ஒரு ரூபா, இரண்டு ரூபா ஆகிய நாணயக்குற்றிகள் தட்டுப்பாட்டினால் பொருள்களை வாங்குவதில் கஷ்ட நிலை ஏற்படுவதாகவும் மிகுதிக் காசைப்பெறமுடியாத நிலை ஏற்படுவதாகவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

சில கடைகளில் மிகுதிக் காசுக்கு இனிப்புகளை கொடுத்து சமாளித்து விடுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இது பற்றி வங்கி வட்டாரங்களில் விசாரித்தபோது கொழும்பிலிருந்து சில்லறை நாணயங்களை இங்கு விமான மூலமே கொண்டுவரவேண்டி இருப்பதாகவும் மிகவும் கூடிய நிறை காரணமாகச் சில்லறை நாணயங்களை இங்கு கொண்டு வருவதில் கஷ்ட நிலை ஏற்பட்டுள்ளதாகவும் —

தாள் காசுகள் பாரம் குறைவாக இருப்பதால் அதனை இலகுவில் விமானத்தில் கொண்டுவர முடிவதாகவும் —

தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

இங்குள்ள வங்கி உயரதிகாரிகள் தமது கொழும்பு தலைமைப் பீடத்துடன் தொடர்புகொண்டு சில்லறை நாணயத் தட்டுப்பாட்டினால் இங்கு மக்கள் படும் சிரமங்களை எடுத்துக்கூறி இதற்கு பரிகாரம் காண முயற்சிக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-135)

## சரஸ்வதி சிலை கல்லூரியில்

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்லூரி வாசலில் வெள்ளைத் தாமரைப பூவில் சரஸ்வதி வீற்றிருக்கும் பாரிய சிலை ஒன்று நிர்மாணிக்கப் படவுள்ளது

இச் சிலை அமைக்கும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விரைவில் இச் சிலை நிறுவப்படும் என்றும் கல்லூரி அதிபர் கு. சண்முகநாதன் தெரிவித்தார்.

[ஜ - 135)

## பரீட்சை ஒத்திவைப்பு

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான [பகுதி II] இறுதிப் பரீட்சை இம் மாதம் 26 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சை எதிர் வரும் 5 ஆம் திகதி சனிக் கிழமை நடைபெறும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேற்படி பரீட்சையில் தோற்றுபவர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்படவுள்ளன. (க)

## திறப்பு விழா

கொக்குவில். ஜூன் 3

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் புதிய கணனி அலுவலக திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 00 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி ச. கார்கேயன் அலுவலகத்தைத் திறந்து வைப்பார். [ஐ-69]

## தரம் பிரிப்பதில் தவறு

# பண்டத்தரிப்பு கடிதம் பாண்டிருப்பு சென்றது

சண்டிலிப்பாய், ஜூன் 3

பண்டத்தரிப்புக்கு முகவரியிடப்பட்டு வரும் கடிதங்கள் சில கிழக்குப் பகுதியில் உள்ள பாண்டிருப்பு தபால் அலுவலகத்திற்கு கொழும்பிலுள்ள தபால் திணைக்கள தரம்பிரிக்கும் பகுதியினரால் அனுப்பப்பட்டு வருவது தெரிய வந்துள்ளது.

அண்மையில் பட்டதாரி நியமனம் பெற்ற பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஒருவருக்கு கொழும்பிலுள்ள கல்வியமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்ட நியமனக் கடிதம் பாண்டிருப்பு தபால அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுபின்னர் அங்கிருந்து இங்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இத்தாமதம் காரணமாக சம்பந்தப்பட்ட பட்டதாரி கொழும்பில் நடைபெறும் பயிற்சி நெறிக்கு உரிய காலத்தில் சென்று பயிற்சி பெற முடியாத நிலை ஏற்பட்டது

இதற்கு முன்னரும் இது போன்று கடிதங்கள் இடம் மாறிச் சென்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-135)

# சமய சந்நிதிகளில்

நல்லூர், ஜூன் 3

யாழ். வண்ணார் பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சமும் இடம்பெறும். (க-111)

★ ★ ★

நல்லூர், ஜூன் 3

யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.

அன்று சங்காபிஷேகம் அன்னதானம் மற்றும் விசேட மேளக் கச்சேரி என்பனவும் இடம் பெறவுள்ளன.

(க-103)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூன் 3

புலோலி ஸ்ரீ பார்வதவர்த்தனி சமேத ஸ்ரீ பசுபதீஸ்வரர் ஆலயத்தின் ஸ்ரீ சிவன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை நடேசரபிஷேகம், ஆருத்திராதரிசனம், சிவன் தீர்த்த உற்சவம் என்பன இடம்பெறும்.

(க-30-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். சிறாம்பியடி ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேக தினவிழா இன்று வியாழக்கிழமை காலை 7 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (க-ரி)

★ ★ ★

சண்டிலிப்பாய், ஜூன் 3

உடுவில் மல்வம் திருக்குடும்ப ஆலய வருடாந்த நவநாள் உற்சவம் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமாகியது.

எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமையன்று முதன் நன்மை பூசையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் திருப்பலி பூசையும், திருச்சுரூப பவனியும் நடைபெறவுளளது. (க-135)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 3

வண்ணை. அரசடி விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு சங்காபிஷேகமும் பிற்பகல் 4.30 மணிக்கு முருகனின் மணவாளக்கோல உற்சவமும் நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் சிவஸ்ரீ பா. சர்வேஸ்வரக் குருக்களின் தெய்வீகச் சொற்பொழிவும் இடம்பெறும்.

(க-ரி)

## மாணவர் கருத்தரங்கு

க. பொ. த. உயர்தர கிறிஸ்தவ பாடநெறி

[புதிய பாடத்திட்டம்]

மேற்படி கருத்தரங்கு 04 - 06 - 99 வெள்ளி மு. ப. 9.30 — 12.30 வரை மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

1999 புதிய பாடத்திட்டத்தின்படி பரீட்சை எடுப்பவர் பங்குகொண்டு பயனடைய அழைக்கின்றோம்.

இயக்குனர்
மறைக்கல்வி நிலையம்

(66280)

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## ஆறுமுகம் சிவனேசமணி

(இணுவில்)

இணுவில் மேற்கை வதிவிடமாகக் கொண்ட திருமதி ஆறுமுகம் சிவனேசமணி 28-05-99 வெள்ளிக் கிழமை சிவபதமடைந்தார்.

31 - 5 - 99 உதயன் பத்திரிகையில் வெளிவந்த அன்னாரின் மரண அறிவித்தலில் அவரின் மகன் ஆறுமுகம் ஜெயானந்தன் (பிரான்ஸ்) அவர்களின் பெயர் தவறுதலாக இடம்பெறவில்லை ஆகையால் அதையும் சேர்த்து வாசிக்கவும்.

தகவல் :
சி. ஆறுமுகம்.
(கணவன்)

''ஆனந்த நிம்மதி''
இணுவில் மேற்கு,
இணுவில்.

)66279)

## கணபதி இராசரத்தினம்

சோளம் தோட்டம் உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த கணபதி இராசரத்தினம் 01- 06 - 99 அன்று காலமானார் இவர் காலஞ்சென்ற கணபதி பாறியமமாவின் அன்புமகனும், நாகம்மாவின் அன்புக்கணவரும் சாந்தி [ஜேர்மனி], வசந்தி [ஜேர்மனி], விஜி[ஜேர்மனி], கோணேஸ்வரி, யோகேஸ்வரன், அவர்களின் அன்புத் தந்தையும் வர்ணகுலசிங்கம் [ஜேர்மனி], கனகரட்ணம்[ஜேர்மனி], ராஜ்குமார்[ஜேர்மனி], ஆகியோரின் அன்பு மருமகனும் சுஜேந்தினி [ஜேர்மனி], குகேந்தினி [ஜேர்மனி] நிந்துஜன் [ஜேர்மனி], டிலக்சன்[ஜேர்மனி] ஜினுசன்[ஜேர்மனி] ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (03-06 99) வியாழக்கிழமை கோண்டாவிலில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக காலை 10 மணியளவில் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
உரும்பிராய் மேற்கு. க. யோகேஸ்வரன் (ரவி)
(66293) (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பாப்பிள்ளை பஞ்சாட்சரம்

(இளைப்பாறிய பிரதம இலிகிதர், சுச்சேரி, யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு கருவேலடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பாப்பிள்ளை பஞ்சாட்சரம் அவர்கள் 1 - 6 - 99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், தனலக்குமியின் அன்புக் கணவரும், ஜெயலக்குமி, கெங்கா (ஜேர்மனி), கௌரி (கொழும்பு), யசோதரா (லண்டன்), காலஞ்சென்ற சசிதரன், கணேசன் (ஜேர்மனி), மோகன் (கொலன்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பஞ்சலிங்கம் (முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்), தெய்வேந்திரம், ராஜரட்ணம் (ஜேர்மனி), ஜெயபாலதேவன் (லண்டன்), சறோஜினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், மேஜா (மாணவி சுண்டுக்குளி மகளிர்), துஷ்யந்தன், மஞ்சுதன் (மாணவர்கள், பரியோவான் கல்லூரி), அனுஜன், அர்ச்சுன், தாட்சாயன் (மாணவர்கள், சென். தோமஸ் கல்லூரி, கொழும்பு) மற்றும் சொரூபன், யதூசன், அங்கவி, சரண்யா, லக்ஷிகா, றாஜீவ், யாழினி ஆகியோரின் பாசமிகு பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் 74, சேச் றோட், வத்தளை என்னுமிடத்தில் 11 மணிக்கு நடைபெற்று கனத்தை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தகவல்:
**பஞ்சலிங்கம் ஜெயலக்குமி**
(மகள்)

கருவேலடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

(சி/7761)

## திருமதி அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ச. அன்னலட்சுமி (02-06-99) ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற பொலீஸ் அலுவலக பரிசோதகர்), அன்பு மனைவியும், செல்வநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர்), தெய்வநாயகி (ஆஸ்திரேலியா), சர்வேஸ்வரன் (பிரதி அதிபர், யா/இணுவில் மத்திய கல்லூரி), சர்வேஸ்வரி (ஆசிரியை, யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), தேவாம்பிகை (ஆஸ்திரேலியா), விக்கினேஸ்வரி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற யோகேஸ்வரன், தயாபரன் (கனடா), நிமலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சீதாலட்சுமி (ஆசிரியை, யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), காலஞ்சென்ற சுந்தரலிங்கம், இராஜேஸ்வரி, ஸ்ரீகாந்தன (அதிபர், யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்), தங்கவேல் (ஆஸ்திரேலியா), நித்தியானந்தன் (ஆஸ்திரேலியா), பத்மினி (கனடா), ஜெயசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருஅருட்செல்வி (கனடா), ஸ்ரீசங்கர் (லண்டன்), சிவா, கிருபா, கோகிலா, குமரன், நிலானி-சற்குணநாதன் (லண்டன்), நிலோஷனி-அன்பழகன், நிறஞ்சனன், நிவேதினி, சுதர்ஷினி, டினேஷ்ஷங்கர், மித்திரா (ஆஸ்திரேலியா), றாஜினி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடம்), வினோத்ஷங்கர் (மாணவன், யாழ். இந்துக் கல்லூரி), தாரணி (பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), கோபிஷங்கர் (யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம், 20 ஆம் அணி), றாம்ஷங்கர், சர்மினி, விஜயஷங்கர், நிதாஷினி (ஜேர்மனி), டிஷான், கஜன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-6-99) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ச. சர்வேஸ்வரன்** (மகன்)
**ஸ்ரீ சர்வேஸ்வரி** (மகள்)

"ஈஸ்வரி வாசா",
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(66296)

## திருமதி ஜெயராணி சிவபாலசுப்பிரமணியம்

(பாப்பா)

(சிவாஸ் ஸ்ரூடியோ, உரிமையாளர்)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராணி சிவபாலசுப்பிரமணியம் 31-05-99 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவபாலசுப்பிரமணியம் (சிவாஸ் ஸ்ரூடியோ உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் சுபாஜினி (கொழும்பு), நிரோஜன் (கனடா), சேந்தன் (கொழும்பு), மயூரிகா (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (3-6-99) வியாழக்கிழமை கொழும்பு கல்கிசை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இ மகேஸ்வரி**
(மாமி)

பிள்ளையார் வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(7764)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 3

சென். ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் ஆயர் அதிவண. டாக்டர் ஈ. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும் யாழ். ஆர்ச் டீக்கன் வண. ஜே. சர்வானந்தன் அடிகளாரும் கலந்து கொள்வர். (க)

## பாஷையூர் அந்தோனியார் உற்சவம் ஆரம்பம்

குருநகர், ஜூன் 3

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருநாள் கொண்டாட்டங்கள் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின.

நவநாள் ஆராதனைகள் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5,30 மணிக்கு செபமாலை வழிபாட்டுடன் ஆரம்பமாகின்றன.

திருநாள் திருப்பலி ஜூன் 13 ஆம் திகதி ஞாயிறன்று காலை 7.00 மணிக்கு யாழ். ஆயர் பேரருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து புனிதரின் தேர்ப்பவனியும் திருச்சுரூப ஆசீர்வாதமும் இடம்பெறும். (இ-51)

## கடலில் மூழ்கி பெண் மரணம்

நெல்லியடி, ஜூன் 3

கடலில் குளிக்கச்சென்ற பெண் ஒருவர், தவறுதலாகக் கடலில் வீழ்ந்து மரணமானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் தொண்டமானாறுக் கடலில் இடம்பெற்றது.

தொண்டமானாறு ஆலய மடத்தில் வசித்து வந்த இருபாலை கட்டைப்பிராயைச் சேர்ந்த பொன்னு செல்லம்மா (வயது 70) என்பவரே மரணமானவராவார். (இ-109)

## கலந்துரையாடல்

வலிகாமம் தெற்கு, ஜூன் 3

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான சிறுவர் உரிமைகள் பற்றிய கலந்துரையாடலும் செயலமர்வும் எதிர்வரும் சனிக்கிழமை இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் இந்த கருத்தரங்கு நடைபெறவுள்ளது. [இ-152]

## பலாப்பழம் விலை வீழ்ச்சி

தென்மராட்சி, ஜூன் 3

சாவகச்சேரிச் சந்தையில் பலாப்பழம் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

சந்தையில் பல இடங்களில் பலாப்பழம் குவிக்கப்பட்டு விற்கப்படுகிறது. [இ 117]

## கருத்தரங்கு

வலி தெற்கு ஜூன் 3

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் நடைபெறவுள்ளன.

இம்மாதம் 5 ஆம் திகதி வகுப்பு 9 க்கான விஞ்ஞானம், 12 ஆம் திகதி வகுப்பு 6க்கான கணிதம், 26 ஆம் திகதி வகுப்பு 9 க்கான கணிதம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (இ-158)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 05 - 1915 | 02 - 05 - 1999 |

திருமதி
## சுப்பிரமணியம் செல்லம்மா

எமது அன்னையின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினருக்கு நன்றி தெரிவிப்பதோடு இன்று (03-06-99) வியாழக்கிழமை நடைபெறுகின்ற சபிண்டீகரணம் மற்றும் வீட்டுக்கிருத்திய வைபவங்களில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

காளிகோயிலடி,
தங்கோடை,
காரைநகர்.

(66298)

# மரண அறிவித்தல்

## ஏரம்பு சின்னத்துரை

(முன்னாள் சாவகச்சேரி சந்தை, இல. 28 புகையிலை வியாபாரி)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஏரம்பு சின்னத்துரை அவர்கள் 02-06-99 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற லில்லிமலர் [யோகம்மா] அவர்களின் அன்புக் கணவரும் திரு. சுந்தரலிங்கம் [பிரான்ஸ்], திரு. சண்முகலிங்கம் [உப அதிபர், யா/சங்குவேலி தமிழ்க் கலவன் பாடசாலை], திரு சிவநேசலிங்கம் [நேசன்][பிரான்ஸ்], திருமதி உ. தேவசேனா [பிரான்ஸ்], திருமதி க. இந்திரசேனா [இணுவில் மேற்கு], திருமதி சு விஜயசேனா [விஜி-பிரான்ஸ்] திரு. அமிர்தலிங்கம் [இராசன் - பிரான்ஸ்], திருமதி அ. பதுமசேனா [ரதி - பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருமதி சு. மண்டலநாயகி [இளைப்பாறிய ஆசிரியை, நீர்கொழும்பு — விஜயரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், தற்போது லண்டன்] சந்திராதேவி [இணுவில் தெற்கு], திருமதி சி பாமதி [பிரான்ஸ்], திரு பொ. உருத்திராங்கதன் [பிரான்ஸ்] திரு வி கனகநாயகம் [முன்னாள் வலி வர்த்தகர், இணுவில் மேற்கு] திரு. க. சுந்தரலிங்கம் [அப்பன்-பிரான்ஸ்], திருமதி அ. போகேஸ்வரி [பிரான்ஸ்], திரு. வி. அருள்நேசன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும லண்டனில் வசிக்கும் திருமதி நிரஞ்சனி [டிம்பிள்], சுதாகரன், திருமதி நிவந்தினி [பபா], பகீரதன், செல்வன் மதன் செல்வன் கடம்பன் ஆகியோரினதும் பிரசாந் [யா/இந்துக் கல்லூரி A/L இறுதியாண்டு], துஷிதா [யா/உடுவில் மகளிர் கல்லூரி ஆண்டு 11], ரஜீவ்சாந் [யா/கொக்குவில் இந்துக் கல்லூரி 9 ஆம் ஆண்டு] ஆகியோரினதும், பிரான்சில் வசிக்கும் சாதனா, மிக்கேல, சாறசா, மாறன், திருமதி மீறாதிவாகரன், சுமியா, ஆண்டிரு, ஆணே, இராஜராஜன், ஜனனி, சுபாஜன், மெலானி ஜெறோம் ஆகியோரினதும் அன்புப் பேரனாரும் திருமதி ஆயிலியம் வினாசித்தம்பி, திரு ஏ சின்னத்தம்பி [உரிமையாளர், கற்பகம் அரிசி ஆலை உடுவில்] ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான திருமதி க. பாக்கியம் திருமதி த இராசம், திரு சி. இராமநாதன் மற்றும் சி துரைராசா [ராசா] திருமதி வ. ஞானமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும ஆவார்.

அன்னாரினது இறுதிக்கிரியைகள் இணுவில் மேற்கு துரைமலர்ப் பொய்கை இல்லத்தில் இன்று (03-6-99) வியாழக்கிழமை பிற்பகல் 2 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**சி. சண்முகலிங்கம்**
(மகன்-ஆசிரியர்)

சுன்னாகம், சன்யோ கோப்பி அன்கூல்பார் ஸ்பதானத்தார்
'துரைமலர்ப் பொய்கை',
இணுவில் மேற்கு,
இணுவில்.

(66311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரப்பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டிருந்தன.

தமிழ்க் குழுக்களை விமர்சிக்கும் வாசகங்கள் அதில் காணப்பட்டன என்று தெரிய வந்தது.

[இ-3-5-7-15-ரீ-139-173]

## லங்காமுடித்த...

(முதலாம் பக்கத் தொடர்)

கேசன்துறைக்கு வந்து சேர்ந்தது.

அங்கிருந்து பயணிகள் பஸ்கள் மூலம் நேற்று நண்பகல் யாழ். நகருக்கு அழைத்து வரப்பட்டனர்.

(இ-5-139)

## இ. தொ. கா.

(முதலாம் பக்கத் தொடர்)

அந்த மகஜரைப் பொறுப்பேற்ற அங்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு நின்று அரைமணி நேரம் ஆர்ப்பாட்டம் செய்து அரசுக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர்.

பொலீஸார் தலையிட்டும் அவர்களின் ஆர்ப்பாட்டத்தைத் தடுக்க முடியவில்லை என்று கூறப்பட்டது.

அதன்பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து இ. தொ. கா. தலைமையகத்துக்கு திரும்பி வந்தனர்.

இ. தொ. காவுக்கு எதிராகக் கோஷமிட்ட அவர்கள் அலுவலகத்துக்கு முன்பாக கொடிக் கம்பத்தில் பறந்து கொண்டிருந்த இ. தொ. கா. கொடியை இறக்கி தீயிட்டனர்.

அதன்பின்னர் தமது அமைப்பின் கொடியையும், சிங்கக்கொடியையும் அந்தக் கம்பத்தில் ஏற்றி விட்டுத் திரும்பினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை அந்த அலுவலகம் மீது வீசினர்.

பேரணியில் கொண்டு சென்ற சுலோக அட்டைகளை அங்கு தீவைத்து விட்டு அவர்கள் கலைந்து சென்றனர்.

(இ-3-21)

## குருநகரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வீதியைச் சேர்ந்த யேசுராசா குணசீலன் (42 வயது), அவரது மகனான குணசீலன் மதிமாறன் (21 வயது) மற்றும் பாரிக் வீதியைச் சேர்ந்த பி. ரஜீக்குமார் (21 வயது) ஆகியோரே கைதானவர்கள் ஆவர்.

(இ-3)

## வவுனியாவில்...

[முதலாம் பக்கத் தொடர்]

பெற்றது.

நேற்றுக் காலை 10-30 மணியளவில் வவுனியா சிந்தாமணிப்பிள்ளையார் ஆலய முன்றலில் ஆரம்பமான பேரணி நகரின் முக்கிய வீதிகளூடாகச் சென்று நகரசபை மைதானத்தை அடைந்தது.

பாடசாலை மாணவர்கள், வர்த்தகசங்கப் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

## மாணவன்...

(முதலாம் பக்கத் தொடர்)

வினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கரவெட்டி மூத்த விநாயகர் கோயிலடியைச் சேர்ந்த இந்த மாணவன் மாலுசந்தி இராணுவத்தினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுதற்சமயம்பருத்தித்துறை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

[இ-3-109]

## மேலதிக செயலர் யோகநாதன் காலமானார்

கல்வி, உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.யோகநாதன் [வயது 61] நேற்று கொழும்பில் காலமானார்.

சமீபகாலமாக சுகவீனமுற்றிருந்த அவர் இந்தியா சென்று சிகிச்சை பெற்று அண்மையில் திரும்பியிருந்தார்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு, வடக்கு — கிழக்கு மாகாணசபை ஆகியவற்றில் பல உயர் பதவிகளை அவர் வகித்துள்ளார்.

[இ-3]

## பல...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பட்டுப் பொது மக்கள் முகாமுக்குக் கூட்டிச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர்

வல்வெட்டித்துறையில் பொலிகண்டிப் பகுதி நேற்றுக் காலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது.

(இ-3-5-7-15-139-109 173-180)


## சுனில் ஆட்ஸ்

- 19-5-99 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கலர் படச் சுருள்களுக்கான படங்கள் வந்து விட்டன.
- உங்கள் கலர் புகைப்படங்களை நவீன தொழில் நுட்ப முறையில் கழுவிப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**சுனில் ஆட்ஸ்,**
272, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/7759]


## 5 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

இருபதாம் நூற்றாண்டின் மாமனிதரும்
யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தருமாகிய
அமரர்

**பேராசிரியர் அ. துரைராசா**

அவர்கள்

1999. 06. 11 வெள்ளிக்கிழமை

நிகழ்ச்சி நிரல்

முற்பகல் 10 மணியளவில் பரமேஸ்வரன் ஆலயத்தில் 1009 நவோத்திர சங்காபிஷேகமும்.
பிற்பகல் 3 மணியளவில் துணைவேந்தர் தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டமும்
பி.ப. 4. 30 க்கு விளையாட்டு நிகழ்வும் இடம்பெறும்.

தகவல்: ச. க. தனேந்திரன்
யாழ். பல்கலைக் கழகம். (66309)


## கலைப்பிரிவின் சிகரம்!

உங்கள்

**BEACON**

(C.C.A. யில்)
யாழ்ப்பாணம்.

**சனி, ஞாயிறு வகுப்புகள்**

நேர அட்டவணை

| பாடம் | A/L 2000 நேரம் | A/L 2001 நேரம் |
|---|---|---|
| Drama | 11-00 – 12-00 | 12-00 – 1-00 |
| Logic | 12-00 — 1-00 | 1-00 2-00 |
| H Cul | 1.00 — 2-00 | 2-00 – 3-00 |
| Tamil | 2 00 — 3 00 | 3.00 4 00 |

**LOGIC - 1999**
(துரித மீட்டல் வினா- விடை வகுப்பு)

Batch I — 9-00 — 11-00
Batch II — 2-00 — 4-00

★ அச்சடித்த குறிப்புகள் வழங்கப்படும்.

எமது ஆசிரியர் குழு
திரு. எஸ்.எஸ். மனோகரன்
திரு. ஜோதீஸ்வரன்
பிரபல ஆசிரியர்
திரு. நிஷாந்தன்

- நிர்வாகம்

(சி/7757)


## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

செயலகத்துக்கு அறிவித்துள்ளது.

கடந்த 27 ஆம் திகதியிட்டு அனுப்பப்பட்ட — இது தொடர்பான கடிதம்—நேற்றுக்காலை யாழ். செயலகம் உட்பட மற்றும் திணைக்களங்களுக்குக் கிடைத்ததாக தெரிவிக்கப்பட்டது.

"அரசின் சிவில் நிர்வாக நடவடிக்கை பற்றிய பிரசாரத்தை முறியடிக்கவே சீர்குலைவு நடவடிக்கையை மேற்கொண்டோம். அதற்கு ஒத்துழைத்தோருக்கு நன்றி.

"தேவை ஏற்பட்டால் முழு சிவில் நிர்வாகத்தையும் ஸ்தம்பிதமடையச் செய்ய வேண்டி வரும். அதற்கு மக்களும், அரச அலுவலர்களும் தயாராக இருங்கள்" — இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(இ-3-5-31)


எமது இன்றைய வீடியோCD வெளியீடு
சிரஞ்சீவி—ரம்பா
பிரகாஸ்ராஜ் நடித்த
டைகர்

**ஆர்க்**
வீடியோ லைபிறறி
51, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

**அல்டி**
யாழ்ப்பாணம்.
T. Phone: 2364

நவம் வீடியோ
பருத்தித்துறை.
(66310)

எமது பிரமிட் வீடியோ CD வெளியீடுகள்!

- அண்ணன் தங்கச்சி
- வாலி
- பெரியண்ணா
- ராஜஸ்தான்

ஐங்கரன் ஒறிஜினல் வெளியீடுகள்!

- இசைத்தென்றல் Vol. 40
- பூமனமே வா

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/7763)


## கரும...

[முதலாம் பக்கத் தொடர்]

மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனா அறிவித்துள்ளார்.

இத்தகைய குற்றத்துக்கு அரச ஊழியர் ஒருவருக்கு குறைந்தது 7 வருடமும் கூடியது 15 வருடமும் சிறைத் தண்டனை விதிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் வேலைகளை மீண்டும் தொடங்குவதற்காக அரச அதிகாரிகள்வங்கி மற்றும் கூட்டுத்தாபன அதிகாரிகள் ஆகியோருக்கான வழிகாட்டல்கள் என்ற தலைப்பில் நேற்று பிற்பகல் மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனா இந்தப்பணிப்புரையை விடுத்துள்ளார்.

பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1. பெருமளவு வசதியீனங்களை எதிர்கொண்டிருக்கும் யாழ் பொதுமக்களின்நன்மை கருதி விடுதலைப் புலிகளின் அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்துவிட்டு செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் ஏனைய சகல வேலை நாள்களிலும் வேலைகளைத் தொடங்கும்படி பாதுகாப்புப் படைகளின் யாழ். தளபதி என்ற முறையிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் சிரேஷ்ட இணைப்பாளர் என்ற முறையிலும் உங்களுக்குப் பணிப்புரை விடுக்கின்றேன்.

2. அதை நிறைவேற்றுவதற்கு நீங்கள் தவறுவது 1998 இன் முதலாம் இலக்க அவசரகால [தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யும்] ஒழுங்கு விதிகள் மற்றும் 1997 ஜனவரி 27 ஆம் திகதி முதல் நடைமுறையில் இருக்கும் பொதுசனப் பாதுகாப்பு சட்டம் ஆகியவற்றை மீறியமைக்காக உங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் நிலைக்கு வழி வகுக்கும்.

1998 இன் முதலாம் இலக்க அவசரகால விதிகளின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

"தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்தின் நோக்கத்தை எய்துவதற்காக அத்தகைய தடை செய்யப்பட்ட இயக்கத்தினால் அல்லது அதன் எந்த உறுப்பினரால் வெளியிடப்படும் உத்தரவு, முடிவு, பிரகடனம் அல்லது பிரசாரம் அல்லது அத்தகைய தகவல்களை யாதேனும் ஒருவருக்கு ஏதேனும் வகையில் பரிமாறுபவர் அல்லது பரிமாற்றம் செய்ய முனைபவர் இந்த விதிகளின் கீழ் ஏழு வருடத்துக்குக் குறையாததும் பதினைந்து வருடங்களுக்குக் கூடாததுமான சிறைத் தண்டனை விதிக்கக் கூடிய குற்றத்துக்குப் பொறுப்பாளியாவார்.

3. ஆகவே 1999 ஜூன் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் அதற்குப் பின்வரும் வேலையைத் தொடர்ந்து மேற்கொள்வதும் இந்தப் பணிப்புரையை உங்கள் திணைக்களம், வங்கி அல்லது கூட்டுத்தாபனத்தில் உள்ள அனைவருக்கும் தெரிவிப்பதும் உங்கள்பொறுப்பாகும்— என்றுள்ளது.

[இ-3]

## யாழ்....

[முதலாம் பக்கத் தொடர்)

மணிக்கு கடையைத் திறந்த போதே அது தீப்பிடித்த விடயம் தெரியவந்தது.

பொது மக்களின் உதவியுடன் தீ பரவாமல் தடுக்கப் பட்டது.

மாநகர சபையின் தீபணைப்புப் படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்ட போதும் பல மணி நேரம் கழித்தே அவர்கள்வந்ததாக கூறப்பட்டது.

வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கே விபத்துக்குக் காரணம் என நம்பப் படுகின்றது. (இ-5-6-7-15 17-86-103-139-173-180)

## யாழ்ப்பாணத்தில்..

(முதலாம் பக்கத் தொடர்)

படையில் இந்தக் 'கார்ட்' டுக்களைப் பெறமுடியும் என்றும் —

இந்தக் 'கார்ட்' டுக்களை விற்பனை செய்ய முகவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

'கார்ட்' இன்றி ஒரு ரூபா, இரண்டு ரூபா, ஐந்து ரூபா நாணயங்களைப் பாவித்து இந்தத் தொலைபேசி மூலம் அழைப்புக்களைப் பெறவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக எடுத்து வரப்பட்டுள்ள இத்தகைய பத்துத் தொலைபேசிக் கருவிகள் மானிப்பாய்ச் சந்தி, நவாலி, கொக்குவில், திருநெல்வேலி, யாழ். பல்கலைக்கழகம், யாழ். மருத்துவ பீடம், யாழ். பஸ் நிலையம், யாழ். செயலகம், யாழ். பிரதான வீதி, நல்லூர் மாநகரசபை ஆகிய இடங்களில் பொருத்தப்படவிருக்கின்றன.

மேலும் ஐந்து தொலைபேசிக் கருவிகள் எடுத்துவரப்படவிருக்கின்றன.

(இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறை வேற்] லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03-06-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org